


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

ISSN: 2582-5518




வெள்ளி ❖ பிப்ரவரி. 23, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 136 ❖ ரூ.10

## குஜராத்தில் அன்று மோடி கேட்டதை இன்று நாங்கள் கேட்கிறோம்!

# டென்ஷன்

## நிதிக்குழுவின் வரம்புக்குள்தான் கடன் வாங்குகிறோம் அமைச்சர் தங்கம் தென்னரசு ஆவேசம்

சென்னை , பிப். 23-

“மத்திய அரசு தனது வரிகள் மீது செஸ் வரி மற்றும் கூடுதல் கட்டணத்தை (Cess and Surcharges) விதிக்கிறது. நியாயமாக பார்த்தால் இந்தத் தொகையையும் மாநில அரசுகளுடன் பகிர்ந்தளிக்க வேண்டும். ஆனால், மத்திய அரசு இந்தத் தொகையை தானே வைத்து கொண்டு திட்டங்களை தீட்டுகிறது. 2021-22-இல் இந்த வரிகளின் மூலம் மத்திய அரசு 5.85 லட்சம் கோடி ரூபாயை திரட்டியது. 2022-23-இல் 6.19 லட்சம் கோடி ரூபாய், 2023-24-இல் 6.5 லட்சம் கோடி ரூபாய் மற்றும் 2024-25 இல் 6.95 லட்சம் கோடி ரூபாய்” என்று சட்டப்பேரவையில் தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விவரித்துள்ளார்.

சட்டப்பேரவையில் 2024-25-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது பதிலுரை ஆற்றிய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, "எங்கள் மாநிலம் 60,000 கோடி ரூபாய் மத்திய அரசுக்கு தருகிறது. அனால் எங்களுக்கு திரும்பிக் கிடைப்பது என்ன? எங்கள் மாநிலம் என்ன கை ஏந்தி இருக்கும் மாநிலமா? - இவ்வாறு மாநில உரிமைக்கு உரத்த குரல் கொடுத்தவர் வேறு யாரும் இல்லை. 2012-ஆம் ஆண்டில் குஜாரத் மாநில முதல்வர்,





இன்றைய பிரதமர் நரேந்திர மோடிதான். குஜராத்தில் இருந்து அன்று அவர் கேட்டதை இன்று தமிழகத்தில் இருந்து நாங்கள் கேட்கிறோம்.

மத்திய அரசு தனது வரிகளை மாநிலங்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று ஒவ்வொரு ஐந்து ஆண்டும் நிதிக்குழு பரிந்துரை செய்கிறது. 10-வது நிதிக்குழுவில் 6.64 % என்று நமது பங்கை தொடர்ந்து குறைத்து, 15-வது நிதிக்குழுவில் 4.08 சதவீதமாகக் குறைத்துள்ளது. தொடர்ந்துவரும் நிதிக்குழு நமது மாநிலத்துக்கு அநீதியை அளிக்கின்றன.

இது போதாதென்று, மத்திய அரசு தனது வரிகள் மீது மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணத்தை, அதாவது Cess and Surcharges, விதிக்கிறது. நியாயமாக பார்த்தால் இத்தொகையையும் மாநில அரசுகளுடன் பகிர்ந்தளிக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு இத்தொகையை தானே வைத்து கொண்டு திட்டங்களை தீட்டுகிறது. 2021-22 இல் cess and surcharge மூலம் மத்திய அரசு 5.85 லட்சம் கோடி ரூபாயை திரட்டியது. 2022-23 இல் 6.19 லட்சம் கோடி ரூபாய், 2023-24 இல் 6.5 லட்சம் கோடி ரூபாய் மற்றும் 2024-25 இல் 6.95 லட்சம் கோடி ரூபாய்.

ஒரு கற்பனைக்கு, ஒருவேளை மத்திய அரசு, கூட்டாட்சித் தத்துவத்தை கடைபிடித்து இத்தொகையை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்திருந்தால், தமிழகத்துக்கு 2021-22 இல் 9,000 கோடி ரூபாய், 2022-23 இல் 10,300 கோடி ரூபாய், 2023-24 இல் 10,900 கோடி ரூபாய் மற்றும் 2024-25 இல் 11,600 கோடி ரூபாய் கிடைத்திருக்கும்.

இந்த அளவுக்கு, மாநில அரசின் பற்றாக்குறை, கடன்சுமை குறைந்திருக்கும். இது தமிழகத்தைச் சார்ந்த பிரச்சினை மட்டும் இல்லை. இது அனைத்து மாநிலங்களைச் சார்ந்த பிரச்சினை. மாநில அரசுகளின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதில் நாட்டுக்கே முன்னோடியாக திகழும் திமுக அரசு, மத்திய அரசு இந்த நியாயமற்ற முறையை மாற்றவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துவோம்.

“10 ஆண்டு காலத்தில் குறைவாகக் கடன் வாங்கினோம்; ஆனால் நாங்கள் 3 ஆண்டுகளில் அதிகமாகக் கடன் வாங்கியுள்ளதாக அதிமுக கூறுவது தவறு. நிதிக்குழுவின் வரம்புக்குள்தான் கடன் வாங்குகிறோம்” திட்டங்களிலேயே, தமிழக அரசுதான் பெருமளவில் பங்களிக்கிறது. பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்துக்கு (நகர்ப்புறம்) மத்திய அரசின் பங்கு வெறும் 1.5 லட்சம். ஆனால், மாநில அரசின் பங்கு 7 லட்சம்" என்று தமிழக சட்டப்பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு விவரித்துள்ளார். தமிழக பாஜகவுக்கு பதிலளிக்கும் விதமாக அவர் இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்.

## “சாதிவாரி கணக்கெடுப்புக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல”- தமிழக சட்டப்பேரவை முதல்வர்

சென்னை, பிப். 23-

“சாதிவாரி கணக்கெடுப்புக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல” என்று சட்டப்பேரவையில் பாமக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில் தெரிவித்துள்ளார்.



சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை தமிழக அரசே எடுத்து நடத்த வேண்டும் என்று பாமக உறுப்பினர்கள் நேற்று தமிழக சட்டப்பேரவையில் குரல் கொடுத்தனர். ஆனால், ஆளுநர் உரையில் இதுபற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறி இதுகுறித்து பேரவையில் விவாதிக்க மறுக்கப்பட்டது. எனினும், தொடர்ந்து பாமக உறுப்பினர்கள் கூச்சல் எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர் அப்பாவு, “நீங்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு பிரச்சினை பண்ண வேண்டும் என்றே கூச்சல் எழுப்புகிறீர்கள். ஏற்கெனவே ஆளுநர் உரையில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய அரசு கணக்கெடுத்தால்மட்டுமே அதை நடைமுறைப்படுத்த முடியும். நீங்கள் அரசியலுக்காகவோ அல்லது எதற்காகவோ மாநில அரசு கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சொல்கிறீர்கள். மாநில அரசு எடுக்க வேண்டிய அவசியமில்லை.

மாநில அரசு கணக்கெடுப்பு நடத்தினாலும், அதனை நடைமுறைபடுத்துவதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்த அரசியலமைப்பு சட்டப்படி பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மத்திய அரசு மட்டும்தான் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த முடியும். முதல்வர் ஸ்டாலினும் உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தக் கோரி சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு அழுத்தம் கொடுத்து இருக்கிறார்கள். உங்களின் கருத்தோடு ஒத்த கருத்தாக முதல்வரும், இந்த அரசும் உள்ளது.” என்றார்.

பின்பு விளக்கமளித்த முதல்வர் ஸ்டாலின், “சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து ஏற்கனவே இந்த அவையில் பலமுறை விவாதிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட்டிலும் இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் தாண்டி பாமக நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி, ஜி.கே.மணி, வேல்முருகன் போன்றோர் இதுகுறித்து என்னிடம் நேரடியாக சந்தித்து கோரிக்கை வைத்துள்ளார்கள். அப்போதே இதுகுறித்து விளக்கமாக பதில் சொல்லியிருக்கிறோம். சாதிவாரி கணக்கெடுப்புக்கு நாங்கள் எதிராளிகள் அல்ல. உங்களுக்கு சாதகமாகதான் நாங்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.” என்று தெரிவித்தார்.

### அறந்தாங்கி வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரின்

## ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை கலெக்டர் நேரில் ஆய்வு

புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் ‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ், பல்வேறு அரசுத் துறைகளின் பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.



பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்குதடையின்றி விரைந்து மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில், ’உங்களைத் தேடி உங்கள் ஊரில்’ என்ற புதிய திட்டத்தை கடந்த 23.11.2023 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, ’உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்ட முகாம், குறிப்பிட்ட வட்டத்தில், ஒவ்வொரு மாதமும் புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும். இத்திட்டத்தின்படி, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அளவிலான இதர உயர் அலுவலர்கள், காலை 9.00 மணி முதல், மறுநாள் காலை 9.00 மணி வரை தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்தில் தங்கி, பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சேவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்துகள ஆய்வு மேற்கொண்டு, பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள், மேம்பட்ட சேவைகள் வழங்குதல் திட்டங்களை விரைவுபடுத்துதல் தொடர்பாக உரிய தீர்வு காண்பர். மேலும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்று அவற்றின்மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள்.

அந்தவகையில், இன்றையதினம் அறந்தாங்கி வட்ட பகுதிகளில் ’உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்கீழ் பல்வேறு அரசுத்துறைகளின் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அழியாநிலை ஊராட்சி, வாழக்குடியிருப்பு பகுதியில் உள்ள நூலகத்தின் செயல்பாடுகள், நூலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் புத்தகங்கள், வருகை பதிவேடுகள் உள்ளிட்டவைகள் குறித்தும், மேலும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் கல்வித்திறன் குறித்தும், வாழக்குடியிருப்பு அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளின் எடை மற்றும் மையத்தின் அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் அறந்தாங்கி நகராட்சி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள ஆசிரியர; மாணவிகளுக்கு கற்பிக்கும் முறைகள் குறித்தும், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் கல்வித்திறன் குறித்தும், மேலப்பட்டு அரசு துணை சுகாதார நிலையத்தில் மருந்துகளின் இருப்புகள், நோயாளிகளின் வருகை விபரங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்தும், மேலப்பட்டு ஊராட்சி மன்ற அலுவலகத்தின் செயல்பாடுகள் குறித்தும், மேலப்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரம் குறித்தும் மற்றும் பரிசோதனை கருவி மூலம் நீரின் தரத்தினை ஆய்வு செய்யும் பணி குறித்தும், பெருங்காடு ஊராட்சி, கூத்தங்குடி கிராமத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரியும் பணியாளர்களின் பணிகள் குறித்தும், மேல்மங்கலம் பெருங்காடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தின் செயல்பாடுகள், கோப்புகள் மற்றும் பதிவேடுகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்தில், அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது பொதுமக்களுக்குத் தேவையான அரசுநலத்திட்ட உதவிகள், அடிப்படை வசதிகள், மருத்துவவசதிகள் உள்ளிட்டவைகள் விரைவாக சென்றுசேர்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் கேட்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்திடவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

எனவே தமிழக அரசின் சேவைகளை எளிதாகவும், விரைவாகவும் பொதுமக்கள் பெறும் வகையில் அனைத்துத்துறை அரசு அலுவலர;களும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் சரவணன் (நெடுஞ்சாலை நிலமெடுப்பு), ரம்யாதேவி (காவிரி - வைகை - குண்டாறு), அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஷோபா, அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சீனிவாசன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, கூட்டுறவு சார்பதிவாளர் அன்னலெட்சுமி, அறந்தாங்கி காவல் துணை கண்காணிப்பாளர் சண்முகசுந்தரம், அறந்தாங்கி வட்டாட்சியர் திருநாவுக்கரசு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமாரவேலன், இந்திராகாந்தி, அறந்தாங்கி நகராட்சி பொறியாளர் தங்கபாண்டி, நகராட்சி சுகாதார ஆய்வாளர் சரவணன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அடைக்கப்பன் (அழியாநிலை), நாகூர் ஹனியா (மேலப்பட்டு) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்

## 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் விவசாயிகளுக்கு முதுகில் குச்சி, வயிற்றில் உதை தான் மிஞ்சியது : மல்லிகார்ஜுன கார்கே

டெல்லி, பிப். 23-

10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் விவசாயிகளுக்கு முதுகில் குச்சி, வயிற்றில் உதை தான் மிஞ்சியது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்பான மத்திய அரசின் பரிந்துரையை நிராகரித்த விவசாயிகள், திட்டமிட்டபடி நேற்று முன்தினம் புதன்கிழமை மீண்டும் டெல்லி நோக்கி செல்லும் போராட்டத்தை தொடங்கினர். பஞ்சாப், அரியானா கானவுரி எல்லையில் தடுப்புகளை மீறி முன்னேற முயன்ற விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டு வீசிய போலீசார், ரப்பர்





குண்டுகளால் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 24 வயது பஞ்சாப் விவசாயி பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும் 160 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த சம்பவம் பஞ்சாப், அரியானா எல்லையில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் இந்த சம்பவம் குறித்து பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் இது இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே; விவசாயிகளின் உயிர் காக்கப்படா விட்டால், இந்தியா எப்படி அமைதியாக இருக்கும்?. கானௌரி எல்லையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பட்டிண்டாவைச் சேர்ந்த இளம் விவசாயி சுபாகரன் சிங் உயிரிழந்தது மிகுந்த வேதனை அளிக்கிறது.

மோடி அரசு விவசாயிகளை என்ன செய்து உள்ளது பாருங்கள். முதலில் 750 விவசாயிகளின் உயிரை பறித்தது. லக்கிம்பூரில் மோடி அமைச்சரின் மகன் விவசாயிகளை காரால் இடித்துக் கொன்றார். மத்தியப் பிரதேச மாநிலம் மண்ட்சூரில் பாஜக ஆட்சியில் நடந்த காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் விவசாயிகள் உயிரிழந்தார்கள். மோடியே நாடாளுமன்றத்தில் விவசாயிகளை “தீவிரவாதிகள்” மற்றும் “ஒட்டுண்ணிகள்” போன்ற மோசமான வார்த்தைகளால் அழைத்தார். 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் விவசாயிகளுக்கு முதுகில் குச்சி, வயிற்றில் உதை தான் மிஞ்சியது. மோடி அரசே இது அவமானம் என்று குறிப்பிட்டுள்ளார்.





புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம், விளத்துப்பட்டி ஊராட்சி. கட்டைக்கோன்பட்டி கிராமத்தில் ஸ்ரீ கரந்தமலை சின்னையா ஆலயத்தில் 22ஆம் ஆண்டு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் கட்டைக்கோன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் பொங்கல் வைத்து வழிபாடு செய்தனர். அதனைத் தொடர்ந்து சுற்றுவட்டார பகுதி மக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்."




# அரிமளத்தில் தாலுகா அலுவலகம் அமைக்க வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை

அரிமளம். பிப்.23

அரிமளத்தில் தாலுகா அலுவலகம் அமைய வேண்டும் என முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அப்பகுதி மக்கள் மனு அனுப்பி உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஒன்றியமாகவும் பேரூராட்சியாவும் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அரிமளத்தை மையமாகக் கொண்டு தனி தாலுகா உருவாக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி முயற்சியால் அரிமளம் தனி தாலுகாவாக அறிவிக்கப்படும் என அப்பகுதி மக்களிடையே பரவலாக நம்பிக்கை எழுந்துள்ளது. இந்நிலையில் கடந்த ஆண்டு தாலுகா அலுவலகம் அமைய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

அதேசமயம் அரிமளம் தனி தாலுகாவாக உருவாக பணிகள் நடைபெற்றதாக கூறப்படுகிறது. இதனிடையே அரிமளத்தில் உருவாக வேண்டிய தாலுகா அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்படுவதாக கூறப்பட்டு வருகிறது. இதற்கு அரிமளம் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் கடந்த 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரிமளத்தில் எந்த ஒரு அரசு அலுவலகங்களும் உருவாக்கப்படவில்லை என வேதனை தெரிவிக்கின்றனர். அதேசமயம் அரிமளத்தை தவிர வேறு இடத்தில் புதிய தாலுகா அலுவலகம் அமைக்கப்பட்டால் அனைத்து கட்சிகளையும் கூட்டி போராட்டம் நடத்தப் போவதாக மக்கள் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இது சம்பந்தமாக முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு அரிமளம் பகுதியை சேர்ந்தவர் அண்ணாமலை என்பவர் மனு ஒன்று அனுப்பியுள்ளனர். எனவே அதிகாரிகள் அரிமளத்தில் தாலுகா அலுவலகம் உருவாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

# 'ரயில்வே போலீஸ் நவீனபடுத்தப்பட வேண்டும்' – இந்து முன்னணி

சென்னை : பிப். 23–

ரயில்வே போலீஸ் நவீனபடுத்தப்பட வேண்டும் என்று இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "ரயில்வே துறை இந்த நாட்டை இணைக்கும் பாலம். எப்படி ஆன்மிகம் இந்நாட்டை இணைக்கிறதோ அதுபோல ரயில்வேயும், அஞ்சலகமும் தேசத்தின் எல்லா பகுதிகளில் உள்ள மக்களை ஒருங்கிணைக்கிறது. ரயில்வே பயணம் பாதுகாப்பானதாகவும், வசதியானதாகவும் மக்கள் கருதுகின்றனர். பிரதமர் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா ஆட்சியில் ரயில்வே துறை வளர்ச்சியில் பல உச்சங்களை தொட்டுள்ளது.

ஒவ்வொரு முறை தேர்தல் வரும்போது மக்களை திசைத் திருப்ப ரயில்வே ஸ்டேஷன்களை சமூக விரோதிகள் குறிவைத்து தாக்கி வருவதை காண்கிறோம். அதுபோல கடந்த இரு மாதங்களாக வந்தே பாரத் ரயில் மீது கல்லெறிவது, ரயில்வே லைனில் எதாவது பொருட்களை வைத்து ரயிலை கவிழ்க்க சதி செய்வதை பார்க்கிறோம். தற்போது ரயிலில் வெடி மருந்து பொருட்கள் கடத்தி வந்ததும் செய்தியாகியுள்ளன. எனவே ரயில் பயண பாதுகாப்பை உறுதி செய்ய தக்க நடவடிக்கைகளை மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டும்.

மேலும், ரயில்கள் மீது தாக்குதல்களை நடத்தும் சமூக விரோதிகளை பிடித்து கடுமையாக தண்டிக்க ரயில்வே போலீஸ் நவீனப்படுத்தப்பட வேண்டும். மேலும், ரயில்வே போலீசாருக்கு அதிக அதிகாரங்களை அளிக்கவும் சட்டம் இயற்ற வேண்டும்.

விமான பயணங்கள் போல ரயில்வே பயணத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். ரயில் மறியல் என்ற பெயரில் ரயில்வே போக்குவரத்தை தடை செய்வதை தடுக்க வேண்டும். விமான நிலையங்கள் போல உயர் பாதுகாப்பு பகுதியாக ரயில் நிலையங்களும் அறிவிக்கப்பட வேண்டும். எனவே மத்திய அரசு ரயில்வே பயணத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்க இந்து முன்னணி சார்பில் கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

# "கரும்புக்கான விலை உயர்வு விவசாயிகள் நலனில் அரசின் உறுதியை காட்டுகிறது" – பிரதமர் மோடி

புதுடெல்லி : பிப். 23–

கரும்பு விலையில் வரலாற்று உயர்வு விவசாயிகள் நலனுக்கான உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் அரசின் உறுதிப்பாட்டை காட்டுவதாக பிரதமர் மோடி நேற்று தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளைச் சுட்டிக்காட்டி பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் பக்கத்தில் நேற்று தொடர் பதிவுகளை வெளியிட்டுள்ளார். அதில், "நாட்டிலுள்ள அனைத்து விவசாய சகோதர, சகோதரிகளின் நலன்கள் தொடர்பான ஒவ்வொரு தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும் எங்களின் அரசு உறுதிபூண்டுள்ளது. இதன் அடிப்படையில் கரும்பு கொள்முதலில் வரலாற்று விலை உயர்வுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக கோடிக்கணக்கான கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், 2024 -25 ம் ஆண்டு கரும்பு விவசாயிகளுக்கு கொள்முதலின் போது கரும்பு ஆலைகள் கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச விலை குவிண்டாலுக்கு ரூ.315-ல் இருந்து ரூ.340 என உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த முடிவுக்கு பின்னர் வெளியான அதிகாரபூர்வ அறிக்கையில், "புதிய எஃப்ஆர்பி கரும்பு விவசாயிகளுக்கான செழிப்பை உறுதி செய்யும். ஏற்கனவே உலகில் கரும்புக்கு அதிகமான விலையை இந்தியா வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், உள்நாட்டு நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் சர்க்கரை வழங்குவதை அரசு உறுதிசெய்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை முடிவு குறித்த மற்றொரு பதிவில், "தேசிய கால்நடை இயக்கம் தொடர்பான முடிவு தீவன உற்பத்தி மற்றும் இன பாதுகாப்பில் ஊக்கமளிக்கும் புதிய வாய்ப்புகளை தொழில் முனைவோருக்கு வழங்கும்" என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். தேசிய கால்நடை இயக்கத்தை மத்திய அரசு நேற்று முன்தினம் புதன்கிழமை மாற்றி அமைத்துள்ளது. இதன்படி, குதிரை, கழுதை மற்றும் ஒட்டகம் தொழில்முனைவை நிறுவுவதற்காக தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், செயற்கைக்கோள் உதிரி பாகங்கள் தயாரிப்பில் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் தனியார் பங்களிப்பை ஈர்க்கும் வகையில் விண்வெளி துறையில் 100 சதவீதம் அந்நிய முதலீட்டை ஈர்க்கும் வகையில் விதிகளை மத்திய அரசு தளர்த்தியுள்ளது. இதுகுறித்து வெளியிட்ட பதிவில் பிரதமர், "வளர்ச்சி மற்றும் புதுமைக்கான சுற்றுப்பாதைக்கு வழிவகுக்கும் வகையில் எங்களது அரசு வாய்ப்புகளின் உலகிற்கு பாதையமைக்கும் வகையில் விண்வெளித்துறையில் நேரடி அந்நிய முதலீட்டு திட்டத்தை புதுப்பித்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# ஆலங்குடியில் தேசிய தொழுநோய் விழிப்புணர்வு போட்டிகளில் பங்கு பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா



ஆலங்குடி பிப் 23

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பாக ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தேசிய தொழுநோய் விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் (பொறு) தேன்மொழி தலைமை வகித்தார். உதவி தலைமை ஆசிரியர் மேரி அருளரசி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் வட்டார மருத்துவ மேற்பரையாளர் முருகேசன் வட்டார மருத்துவம் சாரா மேற்பார்வையாளர் ரமா.ராமநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் திருவரங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் டாக்டர் கார்த்திகேயன் பரிசு வழங்கி தொழுநோய் விழிப்புணர்வு குறித்து சிவந்த அல்லது வெளிர்ந்த உணர்ச்சியற்ற தேமல் தொழு நோயின் ஆரம்ப அறிகுறியாக இருக்கும். கை கால்களில் உணர்ச்சி குறைதல் அல்லது விரல்கள் மடங்குதல் காதுமடல் தடித்திருத்தல் புருவ முடி உதிர்தல் இவைகளுக்கு கூட்டு மருந்து சிகிச்சை தொழுநோய் முற்றிலும் குணப்படுத்தலாம். அனைத்து ஆரம்பசுகாதார நிலையங்களிலும் அரசு மருத்துவமனையிலும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் பரிசோதனை மற்றும் சிகிச்சை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் இவ்வாறு கூறினார். முன்னதாக ஆசிரியர் தா.எட்வர்டு வரவேற்றார். நிகழ்ச்சியின் முடிவில் ஆசிரியர் மேரி அருளரசி நன்றி கூறினார். நிகழ்ச்சியை உடற்கல்வி ஆசிரியர் குழந்தைவேல் ஏற்பாடு செய்திருந்திருந்தார்.

# ஹிஜாவு நிதி நிறுவன மோசடி வழக்கு முக்கிய நிர்வாகியின் ஜாமீன் மனு தள்ளுபடி

சென்னை : பிப். 23–

ஹிஜாவு நிறுவனத்தின் முக்கிய நிர்வாகியான சவுந்தரராஜனின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிய ஹிஜாவு நிதி நிறுவனம், 15 சதவீதம் வட்டி தருவதாகக் கூறி, பொதுமக்களிடம் சுமார் 4,620 கோடி ரூபாய் முதலீடுகள் பெற்று மோசடி செய்துள்ளது. இதுகுறித்து பொருளாதாரக் குற்றப் பிரிவு காவல்துறை வழக்குபதிவுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில், நிறுவன இயக்குநர் அலெக்சாண்டர் மற்றும் முகவர்கள் உள்ளிட்ட 15 பேர் தலைமறைவாக உள்ளனர். இவர்களுக்கு எதிராக லுக்அவுட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள நிர்வாகத்தின் முக்கிய நிர்வாகியும் நான்காவது குற்றவாளியுமான சவுந்தரராஜன் என்பவர் ஜாமீன் கோரி நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி கே.தனசேகரன் முன்பாக நடைபெற்றது. அப்போது சவுந்தரராஜன் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், "சவுந்தரராஜன் தானக முன்வந்து சரணடைந்ததாகவும், குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து அசையும் மற்றும் அசையா சொத்துகள் என 96 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது" என்று கூறினார்.

புகாரை நிரூபிக்கும் வகையில் காவல்துறையின் விசாரணையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் மனுதாரரின் வயதை கருத்தில் கொண்டும் ஜாமீன் வழங்க வேண்டுமென வாதிடப்பட்டது.

காவல்துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர். முனியப்பராஜ் ஆஜராகி, சுமார் 89 ஆயிரம் முதலீட்டாளர்களிடம் இருந்து சுமார் 4,620 கோடி ரூபாய் முதலீடுகள் பெற்று மோசடி செய்துள்ளதாகவும், 16,500 நபர்கள் இதுவரை புகார்கள் அளித்துள்ளதாகவும், 40 பேர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மனுதாரருக்கு ஜாமீன் வழங்கினால் வெளிநாடு தப்பிச் செல்லவும், சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கலைக்க வாய்ப்புள்ளது. மேலும் மீட்க வேண்டிய தொகை அதிகம். எனவே ஜாமீன் வழங்கக் கூடாது என வாதிட்டார். அதேபோல பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் டி.செல்வம் ஆஜராகி, சவுந்தரராஜனுக்கு ஜாமீன் வழங்க எதிர்ப்பு தெரிவித்தார்.

இதனையடுத்து, சவுந்தரராஜனின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார். இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள முக்கிய நபர்கள் இன்னும் தலைமறைவாக உள்ள நிலையில் சவுந்தரராஜனுக்கு ஜாமீன் வழங்க முடியாது என உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வங்கிக் கணக்கில் இருந்து பாஜக பணம் திருடுவதாக காங்கிரஸ் குற்றச்சாட்டு

புதுடெல்லி : பிப். 23–

தங்களின் வங்கிக் கணக்கில் இருந்து பாரதிய ஜனதா கட்சி பணத்தை திருடியிருப்பதாக காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் குற்றம்சாட்டியுள்ளார். காங்கிரஸ் கட்சியின் வங்கிக்கணக்குகளிலிருந்து வருமான வரித் துறை ரூ.65.89 கோடியை வரி நிலுவையாக பிடித்தம் செய்துள்ளது குறித்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் (அமைப்பு) நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "காங்கிரஸ் கட்சியின் மீது பாஜக அரசு திணித்திருக்கும் நிதி பயங்கரவாதம் இது என்பது தெளிவாக தெரிகிறது. வங்கிகளின் சமீபத்திய தகவல்களின்படி, பாஜக அரசு அவற்றை நிர்பந்தம் செய்து தோராயமாக ரூ.65.89 கோடியை எங்களது வைப்புக் கணக்கில் இருந்து எடுத்துள்ளது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (ஏஐசிசி), இந்திய இளைஞர் காங்கிரஸ் (ஐஒய்சி) மற்றும் இந்திய தேசிய மாணவர் சங்கம் (என்எஸ்யுஐ) கணக்குகளில் இருந்து இந்த தொகை எடுக்கப்பட்டுள்ளன.

பாஜகவைப் போல இல்லாமல் நாங்கள் இந்தத் தொகையை கட்சித் தொண்டர்களிடமிருந்தே பெற்றிருக்கிறோம். மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக நடத்திருக்கும் இந்தச் செயலுக்கு என்ன அர்த்தம்? அவர்கள் (பாஜக) வங்கிகளில் இருந்து எங்களது பணத்தைத் திருடுகிறார்கள். நாங்களும் ஆட்சியில் இருந்திருக்கிறோம். காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ கூட்டணி ஆட்சியில் பாஜக இதுபோன்ற சம்பவங்களைச் சந்தித்தது என்று எதையாவது சுட்டிக்காட்ட முடியுமா?

ஒரு கட்சியாக பாஜக இதுவரை வருமான வரி ஏதாவது செலுத்தியுள்ளதா? இது ஜனநாயகக் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகள் மீதான தெளிவான தாக்குதல். மேலும் அவர்கள் இந்தியாவில் எதிர்க்கட்சியின் குரலை ஒடுக்கப் பார்க்கிறார்கள். இது சர்வாதிகாரத்துக்கான உதாரணம்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, கடந்த வாரம், வருமான வரித் துறை காங்கிரஸ் கட்சியின் முக்கியமான நான்கு வங்கிக் கணக்குகளை முடக்கியது. இதை எதிர்த்து, வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் காங்கிரஸ் முறையிட்டது. அதைத் தொடர்ந்து வங்கிக் கணக்கு முடக்கத்தை தற்காலிகமாக ரத்து செய்ய தீர்ப்பாயம் உத்தரவிட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதனிடையே, காங்கிரஸின் வங்கிக் கணக்குகளில் இருந்து ரூ.65 கோடி வரி நிலுவைத் தொகையை வருமான வரித் துறை பிடித்தம் செய்திருந்தது.

இது குறித்து காங்கிரஸ் பொருளாளர் அஜய் மக்கான் கூறுகையில், "ஜனநாயக விரோதமாக எங்கள் கணக்குகளிலிருந்து ரூ.65 கோடி வருமான வரித் துறை பிடித்தம் செய்துள்ளது. தொண்டர்கள் மூலமும் கட்சி உறுப்பினர்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தொகை அது. வருமான வரி துறை அதில் கை வைத்துள்ளது. வரியே செலுத்தாத பாஜகவை வருமான வரி அதிகாரிகள் எந்தக் கேள்வியும் கேட்பதில்லை.

ஆனால், இந்தியாவின் மிகப் பெரிய எதிர்க்கட்சியான காங்கிரஸின் கணக்கு முடக்கப்படுகிறது. மத்திய அமைப்புகளின் இத்தகைய போக்கு இந்தியாவின் ஜனநாயகத்தை அழித்துவிடும். நீதிமன்றம் தலையிட்டு இந்திய ஜனநாயகத்தைக் காக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்து குறிப்பிடத்தக்கது.

# எம்.ஆர். கல்லூரியில் வேளாண் அறிவியல் பற்றிய கருத்தரங்கம்



அரியலூர் : பிப். 23–

எம்.ஆர். கல்லூரியில் வேளாண் அறிவியல் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், நுண்ணுயிரியல் துறையின் சார்பில், வாழ்க்கை அறிவியலில் தொழில் வாய்ப்புகள் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மீனாட்சி இராமசாமி கல்லூரியின் தாளாளர் எம்.ஆர்.இரகுநாதன், இயக்குனர் முனைவர் ஆர்.இராஜமாணிக்கம் சிறப்புரை ஆற்றினார்கள். கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.சங்கீதா முன்னிலை வகித்தார். துறைத் தலைவர் முனைவர் இரா.கலையரசி வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக, திருச்சி காவேரி மகளிர் கல்லூரி பேராசிரியர் முனைவர் என்.புஷ்பா, வாழ்க்கை அறிவியலில் தொழில் வாய்ப்புகள் பற்றியும், சுயதொழில் செய்து எவ்வாறு வருவாய் ஈட்டி வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவது என்பது பற்றியும், மாணவர்களுக்கு விளக்கினார். இதில் நுண்ணுயிர் உரங்கள் தயாரிப்பு முறைகள், அஸோஸ்லா வளர்ப்பு, காளான் வளர்ப்பு முறைகள் பற்றியும், வாழ்க்கை அறிவியலில் உள்ள வேலைவாய்ப்புகள் மற்றும் பணியிடங்கள் பற்றியும், விளங்கினார். நிகழ்ச்சியின் முடிவாக துறையின் பேராசிரியர் எம்.சத்யசூர்யா நன்றியுரை ஆற்றினார்.

# 7வது முறையாக கேஜ்ரிவாலுக்கு அமலாக்கத் துறை சம்மன் : பிப்.26–ல் ஆஜராக வலியுறுத்தல்

புதுடெல்லி : பிப். 23–

டெல்லி மதுபான ஊழல் தொடர்பான பணமோசடி வழக்கில் ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு 7-வது முறையாக அமலாக்கத் துறை சம்மன் அனுப்பி உள்ளது. அவர் பிப்.26-ம் தேதி ஆஜராகும்படி தெரிவித்துள்ளது.



இந்த வழக்குத் தொடர்பாக அமலாக்கத் துறை அனுப்பிய 6 சம்மன்களையும் அரவிந்த் கேஜ்ரிவால் நிராகரித்திருந்தார். பிப்.19-ம் தேதி 6-வது சம்மனை நிராகரித்த கேஜ்ரிவால், "தற்போது இந்த விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. அதனால் அமலாக்கத் துறை காத்திருக்க வேண்டும்" என்று கூறியிருந்தார். அதேபோல், "அமலாக்கத் துறையே நீதிமன்றத்தை நாடியுள்ளதால் மீண்டும் மீண்டும் சம்மன் அனுப்புவதற்கு பதிலாக நீதிமன்றத்தின் முடிவு வரும் வரை காத்திருக்க வேண்டும்" என்று ஆம் ஆத்மி கட்சியும் தெரிவித்திருந்தது.

டெல்லியில் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் தலைமையில் ஆம் ஆத்மி ஆட்சி நடைபெறுகிறது. கடந்த 2021-ம் ஆண்டில் புதிய மதுபான கொள்கையை கேஜ்ரிவால் அரசு அமல்படுத்தியது. இதன்படி 849 தனியார் நிறுவனங்களுக்கு மதுக்கடை உரிமங்கள் வழங்கப்பட்டன. இதில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக அப்போதைய தலைமைச் செயலாளர், துணை நிலை ஆளுநரிடம் அறிக்கை அளித்தார். அதன்படி சிபிஐ, அமலாக்கத் துறை தனித்தனியாக விசாரணை நடத்தி வருகின்றன.

இந்த வழக்கில் டெல்லி முதல்வர் கேஜ்ரிவாலுக்கு அமலாக்கத்துறை சார்பில் கடந்த ஆண்டு நவம்பர் 2, டிசம்பர் 21, கடந்த ஜனவரி 3, 17, பிப்ரவரி 2, 17 ஆகிய தேதிகளில் அடுத்தடுத்து சம்மன்கள் அனுப்பப்பட்டன. ஆனால் 6 சம்மன்களுக்கும் கேஜ்ரிவால் ஆஜராகவில்லை.

இது தொடர்பாக அமலாக்கத் துறை சார்பில் டெல்லியில் உள்ள விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. இந்த வழக்கு தொடர்பாக கடந்த 17-ம் தேதி நீதிமன்றத்தில் கேஜ்ரிவால் நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டு இருந்தது. அன்றைய தினம் காணொலி வாயிலாக அவர் நீதிமன்றத்தில் ஆஜரானார். டெல்லி சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றதால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக முடியவில்லை என்று அவர் விளக்கம் அளித்தார். இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, வழக்கின் அடுத்த விசாரணையை மார்ச் 16-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார். அன்றைய தினம் கேஜ்ரிவால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும். அப்போது முக்கிய உத்தரவு பிறப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே அமலாக்கத் துறை வட்டாரங்கள் கூறும்போது, "ஆறு முறை சம்மன் அனுப்பியும் கேஜ்ரிவால் ஆஜராகவில்லை. 7-வது முறையாக சம்மன் அனுப்ப திட்டமிட்டுள்ளோம். எம்எல்ஏ சட்டவிதிகளின்படி தொடர்ச்சியாக சம்மன்களை புறக்கணிக்கும் நபரை கைது செய்ய முடியும்" என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

23.02.2024 ❖ வரலாறு

# பொன்னகரம் நாட்டுப்படகு மீனவர்கள் கிழக்கு கடற்கரை சாலையில் திடீர் சாலை மறியல் – ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு



அறந்தாங்கி, பிப்.23–

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருகே பொன்னகரம் மீனவ கிராமத்தில் 300க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் உள்ளது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்திற்காக கடலுக்குச் சென்று மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கோட்டைப்பட்டினம் விசைப்படகு மீனவர்கள் தங்கள் பகுதியில் அரிவலை மிக்சர்மடி வலைகள் பயன்படுத்தி மீன்பிடித்ததாக கூறப்படுபடுகிறது, இதைப் பார்த்த பொன்னகரம் நாட்டுப்படகு மீனவர்கள் சிலர் மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்துள்ளனர், தகவலின்பேரில் நேற்று இரவ சம்பவ இடத்திற்கு வந்த மீன்வளத்துறை சரக ஆய்வாளர் கனகராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் இரண்டு நாட்டுப்படகுகளுடன் கடலுக்குச்சென்றனர், அப்போதுகோட்டைப்பட்டினம் பகுதி மீனவர்கள் தங்கள் விசைப்படகில் அங்கு மீன்பிடித்ததை பார்த்த மீன்வளத்துறை அதிகாரி கரைக்கு திரும்புமாறு அறிவுறுத்தினார்.

அப்போது தங்களுடைய விசைப்படகை கொண்டு மீன்வளத்துறை அதிகாரிகள் வந்த படகை நோக்கி அதிபயங்கரமாக மோதி உள்ளனர்.

விசைப்படகு மோதியதால் நாட்டுப்படகு உடைந்து அதில் இருந்த மீன்வளத்துறை சரக ஆய்வாளர் கனகராஜ் கடலில் விழுந்து தத்தளித்த நிலையில் உயிருக்கு போராடினார், உடனடியாக மற்றொரு படகில் வந்த நாட்டுப்படகு மீனவர்கள் கடலில் தத்தளித்த மீன்வளத்துறை அதிகாரி கனகராஜைமீட்டுமணமேல்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

மேலும் தாகுத்தல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் சேதமடைந்த நாட்டுப்படகிற்கு நிவாரணம் வழங்க வேண்டும் நாட்டுப்படகு மீனவர்களின் வாழ்வாரத்தை காக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கக்கோரியும் கிழக்கு கடற்கரை சாலையில் பொன்னகரம் மீனவர்கள் 300க்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களிடம் மீன்வளத்துறை உதவி இயக்குனர் பஞ்சராஜா மற்றும் கோட்டைப்பட்டினம் காவல் துணை கண்காணிப்பாளர் கௌதம் உள்ளிட்டோர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு சேதமடைந்த நாட்டுப்படகிற்கு உரிய நிவாரணம் வழங்குவது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர்.

கோரிக்கையை ஏற்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கலைந்து சென்றனர். மறியல் போராட்டத்தால் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது



▶ தென்காசி மாவட்டம் புளியங்குடி திமுக நகர பொருளாளர் காஜா மைதீன் இல்ல திருமண விழாவிற்கு நகர் மன்ற துணைத் தலைவரும், திமுக நகரச் செயலாளர் ஆ. அந்தோணிசாமி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் நகரத் துணைச் செயலாளர்கள் காந்திமதி அம்மாள், கருப்பசாமி, மாவட்ட பிரதிநிதி சுரேஷ், நகர சிறுபான்மை அணி அமைப்பாளர் சேக் மைதீன், பேராசிரியர் பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு சிறை மத்திய அரசு தீர்வு காண முத்தரசன் கோரிக்கை

சென்னை : பிப். 23–

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தும் அட்டூழியமும் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்நிலையில், மத்திய அரசு உடனடியாக தலையிட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது, "கடலில் மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தும் அட்டூழியமும் தொடர்ந்து நடந்து வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக 500–க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் விளைவாக தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதித்து வருகிறது. இந்த நிலையில் கடந்த வாரத்தில் இலங்கை நீதிமன்றம் மூன்று மீனவர்களுக்கு சிறை தண்டனை விதித்துள்ளது. இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழக மீனவர் சமூகத்தில் கடுமையான கொந்தளிப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ராமேஸ்வரம் பகுதியில் மீனவர்கள்வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகை போராட்டம் அறிவிக்கப்பட்டு, ஆட்சியர் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடம் இருந்து நம்பிக்கை அளிக்கும் செய்தி ஏதும் கிடைக்காத நிலையில் இன்றும், நாளையும், கச்சத்தீவில் நடைபெறும் புனித அந்தோணியார் திருவிழாவை புறக்கணிக்க வேண்டிய தீவிர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் உணர்வை பிரதிபலிக்கும் முறையிலும், இலங்கை அரசிற்கு கண்டனம் தெரிவிக்கும் முறையிலும், மீனவர்கள் போராட்டத்துக்கு, அருட்திரு பங்கு தந்தையும் ஆதரவு தெரிவித்துள்ளார். தமிழ்நாடு மீனவர்கள் ஒட்டு மொத்தமாக போராட்டக் களம் இறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு மத்திய அரசின் கவனத்துக்கு சுட்டிக் காட்டுவதுடன் உடனடியாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையில் சிறைதண்டனை பெற்றுள்ள மீனவர்கள் உட்பட இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் அனைவரையும் விடுவித்து, நாடு திரும்ப ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது. வாழ்வுரிமை பாதுகாப்புக்கான மீனவர்கள் போராட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் ஆதரித்துபங்கேற்கும்என்பதை தெரிவித்துக் கொள்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் காத்திருப்பு போராட்டம்



தரங்கம்பாடி, பிப். 23–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வருவாய்த்துறை அலுவலர்கள் 20–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது.

வருவாய்த் துறை அலுவலர்களின் கோரிக்கைகளான புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்தல் வருவாய் துறை அலுவலர்களின் பணியிறக்கம் பெயர் மாற்ற விதி திருத்தம் அலுவலக உதவியாளர் காலி பணியிடங்கள் நிரப்புதல் உள்ளிட்ட வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் வட்டத் தலைவர் கண்ணதாசன் தலைமையிலும், வட்ட செயலாளர் மரிய ஜோசப் ராஜ் முன்னிலையில் தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் வருவாய் துறை அலுவலர்கள் வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டு பணி புறக்கணிப்பு செய்து வட்டாட்சியர் அலுவலக வாயிலில் காத்திருப்புப் போராட்டம் நடத்தினர்.

இதில் 20–க்கும் மேற்பட்ட வருவாய் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதுகுறித்து வட்டத் தலைவர் கண்ணதாசன் கூறுகையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் உடைய வாழ்வாதார கோரிக்கைகளை தமிழக அரசானது உடனடியாக நிறைவேற்ற வில்லை என்றால் எதிர்வரும் 27.02.2024 முதல் தமிழகம் முழுவதும் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வருவாய் துறை அலுவலர்கள் கலந்து கொள்ளும் காலவரற்ற வேலை நிறுத்தம் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

# கீரமங்கலம் காத்தாயி அம்மன் கோயில் கும்பாபிஷேகம்



ஆலங்குடி,பிப்.23–

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் காத்தாயி அம்மன் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கீரமங்கலம் வடக்கு கிராமத்தில் உள்ள காத்தாயி அம்மன் கோயிலில் நடைபெற்று வந்த திருப்பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து கோயில் கும்பாபிஷேக விழா நேற்று நடைபெற்றது.

இதையொட்டி, கோயில் வளாகத்தில் சில தினங்களாக யாகசாலை பூஜைகள் நடைபெற்றுவந்தன. தொடர்ந்து, வியாழக்கிழமை யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனிதநீர் வாணவேடிக்கைகள், மேளதாளங்களுடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து, அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இதில், கீரமங்கலம், அதைச் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர், கீரமங்கலம் போலீஸார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

# ஆரணி வடக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழா நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, பிப்23–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி ஜி.என்.செட்டி தெருவில் வடக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இப்பள்ளியின் ஆண்டு விழா பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதை முன்னிட்டு மாணவர்களுக்கு இடையே பேச்சுப்போட்டி, கவிதைபோட்டி,கட்டுரை போட்டி,ஒப்புவித்தல் போட்டி, ஓட்டப்பந்தயம் உள்ளிட்ட பல்வேறு வகையான போட்டிகள் நடைபெற்றது. இதன் பின்னர், மாணவர்களின் கண்ணை கவரும் கலை நிகழ்ச்சிகள், உடல் நலத்தை பேணிக்காக்கும் வகையில் சிலம்பப் போட்டி, கராத்தே போட்டி உள்ளிட்டவை நடைபெற்றது.

இதில்,வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் நோட்டு,பரிசு பொருள் உள்ளிட்டவை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில்,சோழவரம் வட்டார கல்வி அலுவலர் முத்துலட்சுமி,பள்ளியின் தலைமை ஆசிரியர் பாக்கியம், ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து,பேரூர் பொருளாளர் கு.கரிகாலன், பேரூராட்சி மன்ற உறுப்பினர் ரகுமான்கான் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டி பேசினர்.

இந்நிகழ்ச்சியில்,உதவி தலைமை ஆசிரியர் ஜெயலலிதா,உதவி ஆசிரியர்கள் ஸ்ரீபவானி, எஸ்தர்லவ்லினா,பேரூர் துணைச் செயலாளர் நிலவழகன்,நிர்வாகிகள் சுப்ரமணியநகர் நாகராஜ்,முரளி,சாலேக், நீலகண்டன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு போட்டி




தென்காசி,பிப்.23–

தென்காசி மாவட்டம்–கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா மற்றும்விளையாட்டுதினவிழா கொண்டாடப்பட்டது, விழாவின் தொடக்கமாக மாணவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர் முதுகலைதமிழாசிரியர் சு.சண்முக சுந்தரம் வரவேற்புரையாற்றினார், விழாவிற்குதலைமைஆசிரியர்ச. ராஜகோபால்தலைமைவகித்தார், முதுகலை வணிகவியல் ஆசிரியர் ராஜன், முதுகலை வேதியியல் ஆசிரியர் பீர் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்,முதுகலை ஆங்கில ஆசிரியர்வேதிருமலைச்செல்வி, தொழில் கல்வி ஆசிரியர் கண்ணன்,பட்டதாரி கணித ஆசிரியர் பாலச்சந்தர், பள்ளி மேலாண்மை குழுவின்சட்ட புரவல உறுப்பினர் வழக்கறிஞர் எஸ்.ஆர். எஸ். ரமேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஓவியஆசிரியர்முகைதீன் ஆண்டறிக்கை வாசித்தார், விழாவில் மாநில அளவில் சிலம்பப் போட்டியில் பங்கெடுத்த மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது, விழாவில்நம் நாட்டுக்கு விடுதலைக்காகஉழைத்த தேச தலைவர்கள் குறித்தபேச்சு போட்டி, கவிதை, நடனம், கும்மிபாட்டு, வில்லுப்பாட்டு, சிலம்பாட்டம் போன்ற மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவில் தென்னிந்திய அளவில் விஜயவாடாவில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் பங்குபெற்று நான்காவது இடம் பெற்ற பத்தாம் வகுப்பு மாணவர்கள்ஜெயக்குமார், அரவிந்த்தாக்ஷன்,மற்றும் அறிவியல் ஆசிரியை புதுமைராஜாத்தி ஆகியோர் பாராட்டப்பட்டனர். பள்ளியின்உடற்கல்விஆசிரியர்கு மாரசேகர் நன்றிகூறிவிழா நாட்டுப்பண்ணோடு நிறைவுற்றது.

# பெருநாவலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணித வேடிக்கை நாள் நிகழ்ச்சி



பெருநாவலூர் : பிப். 23–

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலை அடுத்த பெருநாவலூரில் இயங்கி வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணிதத்துறை சார்பில் மாணவர்களுக்கு தாங்கள் கற்கும் கணித பாடத்தில் ஈடுபாடு ஏற்படுத்தும் நோக்கத்தோடு கணிதம் வேடிக்கை நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

கல்லூரி முதல்வர் பேராசிரியர் பாலமுருகன் தலைமையேற்று துவக்கி வைத்து பேசும்போது பல்வேறு போட்டி தேர்வுகளுக்கு கணித பாடத்தின் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு விளக்கி கூறினார். கணித துறை தலைவர் முனைவர் பா. கிளாடிஸ் வரவேற்று பேசினார். மாணவ, மாணவிகளுக்கு கணிதம் சார்ந்த பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கணிதத்துறை பேராசிரியர்கள் பாண்டிச்செல்வி, விமலா, உதயராணி சத்தியா மற்றும் அனைத்து துறை பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக மூன்றாம் ஆண்டு மாணவி சி.சரண்யா நன்றி கூறினார்.

# 332 ஆய்வக நுட்புனர்களுக்கு பணி நியமன ஆணை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்



*சென்னை : பிப். 23–*

*சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 332 ஆய்வக நுட்புனர்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று பணிநியமன ஆணையினை வழங்கினார்.*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பின்னர் இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, "முதல்வரின் அறிவுறுத்தலோடு கடந்த 6.2.2024 அன்று மருத்துவ பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் 1,021 மருத்துவ பணியிடங்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அந்த 1021 மருத்துவர்களும் 15 நாட்கள் கால அவகாசத்துக்குள் பணியில் சேரவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.*

*அந்த வகையில் 90 சதவிகித்திற்கு மேலான மருத்துவர்கள் தற்போது தமது பணியிடங்களுக்குச் சென்று பணியினை மேற்கொண்டிருக்கிறார்கள். அதே போல் கடந்த 11.02.2024 அன்று 977 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அவர்களுக்கும் 15 நாட்கள் கால அவகாசம் தரப்பட்டது. இதுவரை ஏறத்தாழ 50 சதவிகித செவிலியர்கள் பணியில் சேர்ந்து பணியாற்ற தொடங்கியிருக்கிறார்கள்.*

*இந்த நிலையில் இந்த துறையில் காலியாக இருக்கிற ஆய்வக நுட்புனர்கள் பணியிடங்கள் 332 நிரப்புவதற்குறிய நடவடிக்கைகளை முதல்வரின் அறிவுறுத்தலோடு மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் அதற்கான அனைத்து பணிகளையும் முடித்து கடந்த செவ்வாய்கிழமை அந்த பட்டியல் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புமருந்துத்துறை இயக்குநரிடம்தரப்பட்டது. இந்த துறையில் கடந்த 3 நிகழ்வுகளாக 6.02.2024, 11.02.2024 மற்றும் இன்று (நேற்று) 22.02.2024 ஆகிய நாட்களில் நடைபெற்ற பணி நியமன உத்தரவுகள், இந்தியாவிலேயே முதல்முறையாக புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு கலந்தாய்வு என்கின்ற வகையில் கலந்தாய்வு நடத்தப்பட்டு அவரவர்கள் விரும்புகிற இடங்களுக்கு பணிநியன ஆணைகள் வழங்கப்பட்டது.*

*அதேபோல் நேற்று முன்தினம் புதன்கிழமை (21.02.2024) ஒரே நாளில் இந்த 332 ஆய்வக நுட்புனர் பணியிடங்களுக்கான கலந்தாய்வு நடத்தப்பட்டு, அவரவர்கள் விரும்புகிற இடங்களுக்கு அவர்கள் தேர்வு செய்து பணிநியமன ஆணைகள் பெற்றிருக்கிறார்கள். தற்போது 332 ஆய்வக நுட்புனர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கியிருக்கிறோம். பணி ஆணைகளைபெறும்போது அவரவர் சொந்த பகுதிகளிலேயே பணி ஆணை கிடைத்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அங்கேயே நாங்கள் பணியாற்றுவதற்கு வாய்ப்புகள் தந்த அரசிற்கு நன்றியினை தெரிவித்தார்கள்.*

*இன்னமும் இந்த துறையைப்பொறுத்தவரை பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற சூழ்நிலையில் 2,250 கிராம சுகாதார செவிலியர்கள், 986 மருந்தாளுநர்கள், 1066 சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் 798 ஆக மொத்தம் 5100 பேரை தேர்வு செய்வதற்குரிய பணிகளை மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) செய்துக்கொண்டிருக்கிறது. அப்பணிகளும் இறுதி நிலைக்குவந்துள்ளது. அந்த வழக்குகளையெல்லாம் நமது துறையின் செயலாளர் அவர்கள் நல்லதீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை சட்டபூர்வமாக மேற்கொண்டு வருகிறார்கள்.*

*தமிழக முதல்வரின் அறிவுறுத்தலோடு, 5100 பணியிடங்களும்எதிர்வரும் ஒரு மாத காலத்திற்குள் நிரப்புவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அதாவது கடந்த 06.02.2024 அன்று 1021 மருத்துவர்களுக்கும், 11.02.2024 அன்று 977 தற்காலிக செவிலியர்களுக்கும், இன்று (22.02.2024) 332 ஆய்வக நுட்புனர்கள் என ஏறத்தாழ 2,200க்கும் மேற்பட்ட மருத்துவப் பணியாளர் பணியிடங்கள் கடந்த 20 நாட்களிலேயே நிரப்பப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.*

# தில்லையாடியில் தியாகி வள்ளியம்மை நினைவு தினம் அனுசரிப்பு





மயிலாடுதுறை, பிப்.23–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம்இ தில்லையாடியில் தியாகி தில்லையாடி வள்ளியம்மை நினைவு தினத்தையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபத்தில் அம்மையாரின் திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்திய மக்களின் தன்மானத்தையும் தன்னுரிமையையும் காக்க அண்ணல் மகாத்மா காந்தியடிகள் நடத்திய அறப்போராட்டத்தில் தனது தாயாருடன் இளம் வயதிலேயே வரலாற்று நாயகி வள்ளியம்மையும் களம் இறங்கினார். 22.12.1913 அன்று போராட்டத்தின்போது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 3 மாத காலம் சிறையில் பல்வேறு துன்பங்களால் பெரிதும் உடல்நலம் பாதிக்கப்பட்டார். காய்ச்சலால் அவதியுற்று தில்லையாடி வள்ளியம்மை விடுதலையாகி வெளியில் வந்தார். அஞ்சாமையின் உறைவிடமாகத் திகழ்ந்து தியாகத்தின் திருவுருவாய் வாழ்ந்து தாய்நாட்டின் மானம் காக்கத் தமது வாழ்நாள் வசந்தத்தைச் சுருக்கி கொண்ட வள்ளியம்மை எனும் அந்த வீராங்கனை 22.02.1914–ல் மறைந்தார்.

தியாகத்தின் திருவுருவாய் சுடர்விடும் வீராங்கனை வள்ளியம்மையின் வரலாற்றை உலகறிய செய்து பெருமை சேர்க்கும் வகையில் தில்லையாடி வள்ளியம்மையை போற்றும் வகையில் தில்லையாடியில் நினைவு மண்டபம் 1971–ம் ஆண்டு திறக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 22–ஆம் தேதி நினைவு தினம் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. நம் இனத்தின் விடுதலைக்காகவும் விடுதலை உணர்வை முன்னிறுத்தி போராடிய போராட்ட வீராங்கனைக்கு நாம் உயிர் உள்ளவரை போற்றி வணங்கிட வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மங்கை உமா மகேஸ்வரி சங்கர், செம்பனார்கோவில் ஒன்றிய குழுத்தலைவர் நந்தினி ஸ்ரீதர், சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் உ.அர்ச்சனா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கார்த்திகேயன், தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், குத்தாலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மங்கை சங்கர், ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் பாஸ்கரன், வட்டார வளர்ச்சி அலுவலர் மீனா, தில்லையாடி ஊராட்சி மன்ற தலைவர் ரங்கராஜ், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் அனுசியா மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# "திமுக தூங்கிக் கொண்டிருக்கிறது" மேகேதாட்டு விவகாரத்தில் இபிஎஸ் காட்டம்

சென்னை, பிப். 23–

"உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி ஒரு நல்ல தீர்ப்பை பெற்று தந்து இருக்கிறோம். இன்று ஒரு வேளை மேகேதாட்டுவில் அணை கட்டப்பட்டுவிட்டால், மேட்டூருக்கு தண்ணீர் வராமல் வறண்டு போய்விடும். டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாக ஆகிவிடும். எனவே இந்த அரசு அலட்சியமாக செயல்பட்டு நடந்துகொண்டு இருப்பதனால் தான் இதனை நாங்கள் அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம்" என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



காவிரி விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொண்டு வந்தார் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி. உச்ச நீதிமன்ற தீர்ப்பை செயல்படுத்த மட்டுமே ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும் கடந்த ஆட்சியில் மேகேதாட்டு அணை விவகாரம் தொடர்பாக கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கம் அளித்து பேசினார். தமிழ்நாட்டில் பிறந்த யாரும் மேகேதாட்டுவில் அணை கட்ட ஆதரவு தரமாட்டார்கள் என்று ஆவேசமாகப் பேசினார். இந்த நிலையில் துரைமுருகன் அளித்த விளக்கத்தை ஏற்க மறுத்து அதிமுக எம்எல்ஏக்கள் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதையடுத்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி இது குறித்து செய்தியாளர்களிடத்தில் பேசியிருப்பதாவது, "காவிரி நதிநீர் பிரச்சினை குறித்து திமுக அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். காவிரி மேலாண்மை ஆணையத்தின் 28 வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு தமிழகத்துக்கு பாதகமானது. இதை நான் சுட்டிக்காட்டினேன். காவிரி நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பின்படி உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு உட்பட்டு செயல்படுவதற்கு மட்டும்தான் காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டது.

இந்த ஆணையத்தின் பணிகளும் குழுவின் பணிகளும் முறையாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதில், முதலாவது, காவிரி நீரை தேக்குதல், பகிர்மானம் செய்தல், முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல். இரண்டாவது, காவிரி நீரை முறைப்படுத்தும் குழுவின் துணையுடன் அணைகள் செயல்பாட்டை மேற்பார்வையிடுதல் மற்றும் அவற்றிலிருந்து நீரை பாசனம் மற்றும் இதர தேவைகளுக்கு வழங்குவதை முறைப்படுத்துதல் உள்ளிட்டவைகள் அடங்கும். இவற்றைத் தவிர வேறு எந்த பணிகள் மேற்கொள்ளவும், இந்த அமைப்புகளுக்கு அதிகாரம் கிடையாது, இந்நிலையில் புதிதாக மேகேதாட்டு அணை கட்டுவது குறித்து விவாதிக்க இந்த ஆணையத்திற்கோ, குழுவுக்கோ எந்தவித அதிகாரமும் கிடையாது.

இன்றைக்கு டெல்டா மாவட்ட விவசாயிகள் கொந்தளித்து போய் இருக்கிறார்கள். இந்த அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு என்று ஒரு வரையறுக்கப்பட்ட அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்துக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அதிகாரத்தை மீறி செயல்படுகிறது. இந்த அதிகாரத்தை மீறி செயல்படும் போது அதிமுக உரிய நடவடிக்கை எடுத்தது. இதனால் மேகேதாட்டு குறித்து எந்த அறிவிப்பையும் கர்நாடகா வைக்கவில்லை. ஆனால் இந்த திமுக அரசு வந்த பிறகு இப்படி இந்த 28-வது கூட்டத்தில் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இது உண்மையிலையே கண்டிக்கத்தக்கது.

இந்த அரசு விவசாயிகள் மீது அக்கறையின்றி மெத்தனமாக செயல்படுகிறது. இனிமேலும் இந்த அரசு தூங்கி கொண்டு இருக்காமல், விவசாயிகள் நலன் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் விரைவில் நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கூறுகிறேன். நாங்கள் இதைப் பற்றி பேசிய பிறகுதான் தூக்கத்திலிருந்து விழித்து, உச்ச நீதிமன்றம் செல்வதாக நீர்வளத்துறை அமைச்சர் சொல்கிறார். அதைத்தான் ஏன் செய்யவில்லை? அதுதான் எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுகிறது. உடனடியாக 28-வது காவிரி மேலாண்மை ஆணையம் கூட்டம் முடிந்த பிறகு, தமிழகத்துக்கு அநீதி இழைக்கப்பட்டது என்று தெரிந்தவுடன் இது குறித்து விவாதித்திருக்க வேண்டும்.

தற்போது சட்டமன்றம் கூடியிருக்கும் பட்சத்தில் இந்த காவிரி மேலாண்மை ஆணையம் எடுத்த முடிவு சரி இல்லை என்று கூறி ஒரு கண்டன தீர்மானத்தை நிறைவேற்றி, இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது என்று ஒரு அவதூறு வழக்கை தொடர்ந்திருந்தால் சரியானது. ஆனால் அவர்களை எதையுமே செய்யவில்லையே.

அண்டை மாநிலத்தை முழுக்க முழுக்க தண்ணீருக்காக நம்பி இருப்பது தமிழ்நாடுதான். 20 மாவட்ட மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக விளங்குவது காவிரி நீர்தான். டெல்டா பாசன விவசாயிகள் அதிகமாக பாசனம் பெருவது காவேரியில் தான். ஜீவநதிக்கு இப்படி ஒரு ஆபத்து ஏற்படுகின்ற போது, இந்த அரசு அலட்சியமாக இருப்பது கண்டிக்கத்தக்கது. இதற்குரிய முயற்சியை இந்த அரசு எடுக்கவில்லை. இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கிறார்கள். தற்போது மிகவும் நெருக்கமாக இருப்பதாக கூறுகிறார்கள். கர்நாடக முதல்வரும், தமிழக அமைச்சரும் நெருக்கமாக இருக்கிறார்கள். இவ்வாறு நெருக்கமாக இருக்கும்போது, இப்படி ஒரு பிரச்சினை வரும்போது ஏன் செயல்படவில்லை" என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

# புதுவை சட்டப்பேரவையில் ஐந்து மாத செலவுக்கான ரூ. 4,634 கோடிக்கு இடைக்கால பட்ஜெட் : திமுக, காங்கிரஸ் வெளிநடப்பு

புதுச்சேரி : பிப். 23–

புதுச்சேரி சட்டப்பேரவையில் நேற்று ஐந்து மாத செலவுக்கான ரூ. 4634 கோடிக்கான இடைக்கால பட்ஜெட் தாக்கலானது. முழு பட்ஜெட் தாக்கல் செய்யாததால் எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமையில் திமுக, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.



புதுவை சட்டப்பேரவையில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். யூனியன் பிரதேசமான புதுவையில் பட்ஜெட் தாக்கலுக்கு மத்திய நிதித்துறை, உள்துறையிடம் அனுமதி பெற வேண்டும். இந்நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் வருவதால் 2024–25ம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை மார்ச் மாதம் தாக்கல் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்ய புதுவை சட்டப்பேரவை நேற்று காலை 9.45 மணிக்கு கூடியது.

துவக்கத்தில் இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டன. புதுச்சேரி முன்னாள் அமைச்சர் கண்ணன் மறைவு குறித்து இரங்கல் தீர்மானத்தை முதல்வர் ரங்கசாமி வாசித்தார். அதையடுத்து காங்கிரஸைச் சேர்ந்த வைத்தியநாதன், திமுகவைச் சேர்ந்த நாஜிம், சுயேட்சை எம்எல்ஏ நேரு, எதிர்க்கட்சித் தலைவர் சிவா, அமைச்சர் நமச்சிவாயம் ஆகியோர் பேசினர். சிலை அமைக்க கோரிக்கை வைத்தனர். அதைத்தொடர்ந்து மறைந்த எம்எஸ் சுவாமிநாதன், பங்காரு அடிகளார், சங்கரய்யா, பாத்திமா பீவி, நடிகர் விஜயகாந்த் ஆகியோரின் இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டன. உறுப்பினர்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அரசு செலவினங்களுக்கான இடைக்கால பட்ஜெட்டை நிதி பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி தாக்கல் செய்தார். ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான ஐந்து மாத செலவினங்களுக்கு ரூ. 4634 கோடி 29 லட்சத்து 89 ஆயிரத்தில் இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்தார். முழு பட்ஜெட் தாக்கல் செய்யாததால் திமுக, காங்கிரஸ் வெளிநடப்பு செய்தது.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர் சிவா எழுந்து பேசும்போது, "மத்திய அரசு நிதி ஒதுக்கிவிட்டார்கள். முழு பட்ஜெட்டை முயற்சி எடுத்திருந்தால் போட்டிருக்கலாம். ஆளுநர் பிரச்சினையால் அனுப்பவில்லையா. பத்து ஆண்டுகள் பின்தங்கிவிட்டனர். வாய்ப்பு கிடைத்திருந்தாலும் அலட்சியமாக கோஷ்டி பூசலால் தவற விட்டுள்ளீர்கள். புதுச்சேரிக்கு பிரச்சினை அதிகமாக இருக்கிறது. 3 நாட்களாவது கூட்டத்தை நடத்தலாம். கலந்து பேசினால் அதிகாரிகளுக்கு தெரியும். அடுத்து ஆறு மாதங்கள் கழித்துதான் கூட்டத்தை நடத்துவீர்கள். அதனால் வெளிநடப்பு செய்கிறேன்" என்றார்.

இந்நிலையில் தொடர்ந்து சட்டப்பேரவைத் தலைவர் அறிக்கைகளை வாசித்தார். அதையடுத்து எதிர்க்கட்சியான திமுக, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

# கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தி அறிவித்துள்ள பிரதமர் மோடிக்கு மனமார்ந்த நன்றி – அண்ணாமலை

சென்னை : பிப். 23–

கரும்பு கொள்முதல் விலையைரூ.340ஆகஉயர்த்திய மத்திய அரசுக்கு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை நன்றி தெரிவித்துள்ளார்.



கரும்பு கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.315ல் இருந்து ரூ.340 ஆக உயர்த்தி வழங்க பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்நிலையில் இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அண்ணாமலை; மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், கரும்பு கொள்முதல் விலையை, குவிண்டாலுக்கு ரூ. 315 லிருந்து, ரூ.340 ஆக உயர்த்தி அறிவித்துள்ள பிரதமர் மோடிக்கு, தமிழக கரும்பு விவசாயிகள் சார்பிலும், தமிழ்நாடு பாஜக சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொடர்ந்து பல நலத்திட்டங்களைச் செயல்படுத்தி, விவசாயிகளின் நலன்காக்கும் உற்ற நண்பனாக நமது மத்திய அரசு விளங்கிக் கொண்டிருப்பதில், மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். கரும்புக்கு குறைந்தபட்ச ஆதார விலையை குவிண்டாலுக்கு ரூ.400 ஆக உயர்த்த வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

# தமிழகத்துக்கு ரூ.11 லட்சம் கோடி நிதியை மத்திய அரசு வழங்கியுள்ளது : அமைச்சர் எல்.முருகன் பேச்சு

கோவை : பிப். 23–

10 ஆண்டுகளில் 11 லட்சம் கோடி வளர்ச்சி நிதியாக தமிழகத்திற்கு மத்திய அரசு வழங்கி இருப்பதாகவும், இதனால் தமிழகத்தின் உட்கட்டமைப்பு அபரிமிதமாக வளர்ச்சி அடைந்து இருப்பதாக மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.



மாநிலங்களவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள மத்திய இணை அமைச்சர் எல். முருகன் நேற்று பிற்பகல் கோவை விமான நிலையம் வந்தடைந்தார். கோவை விமான நிலையத்தில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து, இருவரும் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அண்ணாமலை பேசும் போது, " 8.5 கோடி தமிழ் மக்களின் இணைப்பு பாலமாக எல்.முருகன் இருப்பார். அவருக்கு பொறுப்பு வழங்கிய பிரதமருக்கு நன்றி. அடுத்த 6 ஆண்டுகளில் தமிழகத்திற்கு வரவேண்டிய வளர்ச்சி திட்டங்களுக்கு உறுதுணையாக எல். முருகன் இருப்பார். கடந்த முறை உறுப்பினராக இருந்த போதும் இவருடைய பணிகள் மிகவும் முக்கியமானவை. இரண்டு துறைகளை செயல்படுத்தி, தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் வளர்ச்சி திட்டங்களை சிறப்பாக கொண்டு சென்றார்." என்றார்.

மேலும், "நடிகை த்ரிஷா குறித்த அவதூறாக பேசுவது கருத்து சுதந்திரம் கிடையாது. காவல்துறையினர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து திட்டங்களுக்கும் தலைவர்களின் பெயர்களை வைப்பது நல்ல ஆட்சிக்கு உதாரணமாக இருக்காது. கோவைக்கு வரும் ரயில்கள் ரத்து செய்யப்படவில்லை. ரயில்கள் வரும் போது கூடுதல் டிராபிக் ஏற்படுவதால் அருகில் உள்ள போத்தனூர் ரயில் நிலையம் மேம்படுத்தப்பட உள்ளது. கோவைக்கு வந்தே பாரத் ரயில் போல புல்லட் ரயிலும் வரலாம்" என்றார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், " தமிழகத்திலிருந்து பிரதிநிதித்துவம் வேண்டும் என்கிற அடிப்படையில் தமிழகத்தின் வளர்ச்சிக்காக இணைப்பு பாலமாக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளேன். இது தமிழக மக்கள் மீது பிரதமர் வைத்திருக்கும் மரியாதையை காட்டுகிறது. தமிழகத்திற்கு 11 லட்சம் கோடி நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு சார்பில் தமிழகத்தின் உள்கட்டமைப்புகள் அபரிமிதமாக வளர்ச்சி அடைந்து வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

# புதுக்கோட்டை சாந்தநாதசுவாமி திருக்கோயிலில் 40 ஆம் ஆண்டு மஹா பிரதோஷ வழிபாடு நடைபெற்றது

புதுக்கோட்டை, பிப்.23–

புதுக்கோட்டை அருள்மிகு வேதநாயகி உடனுறை சாந்தநாதசுவாமி திருக்கோயிலில் 40 -ஆம் ஆண்டு மஹா பிரதோஷ வழிபாடு நடைபெற்றது, காலையில் மங்கள இசையுடன் கோபூஜை கணபதி ஹோமம் ருத்ரஜபம் கடபூஜை கலச ஆவாஹனம், பாராயணம், கன்யா பூஜை, லட்சுமிபூஜை, மஹா பூர்ணாஹூதி பூஜைகள் நடைபெற்றது.



தொடர்ந்து, வேதநாயகி உடனுறை சாந்தநாத சுவாமிக்கு மற்றும் விநாயகர் பைரவர் உள்ளிட்ட சுவாமிக்கு பாலபிஷேகம் பன்னிர் தயிர் இளநீர் சந்தனம், மஞ்சள் நீர் திருநீர் உள்ளிட்ட சிறப்பு அபிஷேகங்கள் சந்தனக்காப்பு மலர் அலங்காரத்துடன் தீபாராதனை நடைபெற்றது. மாலையில், நந்திகேஸ்வரர்க்கு பாலபிஷேகம், பன்னீர், தயிர்,பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் கலசாபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது, நந்திகேஸ்வரர் வெள்ளிக்கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார், பின்னர் உற்சவர் வேதநாயகி உடனுறை சாந்தநாதசுவாமி மலர் அலங்காரத்தில் ஆலயத்தில் மும்முறை உட்பிரகாரம் மங்கள இசையுடன் வலம் வந்தது திரளான பக்தர்கள் வருகைதந்து சுவாமியை தரிசனம் செய்தனர்.

மஹா பிரதோஷ வழிபாடு விழா ஏற்பாடுகளை மல்லிகாவெங்கட்ராமன், திருக்கோவில் நிர்வாகிகள் அரிமளம் ரவி சிவாச்சாரியார் கோயில் ஊழியர்கள்பக்தர்கள் உட்பட பலர் கவனித்தனர்.

# கலைஞர் நினைவிடம், புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவிடம் வரும் 26ம் தேதி திறப்பு

## பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை : பிப். 23, பிப். 26–ம் தேதி இரவு 7 மணிக்கு கலைஞர் நினைவிடம் திறக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில், கேள்வி பதில் நேரத்தில் ஆயிரம் விளக்கு தொகுதி உறுப்பினர் எழிலன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின்,"நின்ற தொகுதிகளில் எல்லாம் வென்ற தலைவன், நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவன் கலைஞர். கலைஞரின் நினைவிடம் முழுமை அடைந்திருக்கிறது. அது மட்டுமல்ல கலைஞரை உருவாக்கிய, நமது தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் நினைவிடமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட அண்ணாவின் நினைவிடமும், கலைஞரின் நினைவிடமும் வருகிற பிப்ரவரி 26ம் தேதி இரவு 7 மணிக்கு திறக்கப்பட உள்ளது. நிகழ்ச்சிக்கு அழைப்பிதழ் அச்சிடப்படவில்லை. விழாவாக கொண்டாட விரும்பவில்லை. நிகழ்ச்சியாகவே நடத்த முடிவெடுத்துள்ளோம். ஆகவே நிகழ்ச்சிக்கு எதிர்க்கட்சி, தோழமை கட்சி உள்பட எல்லா கட்சி உறுப்பினர்களும் வர வேண்டும் என்று சபாநாயகர் மூலம் கேட்டுக்கொள்கிறேன்," என்று தெரிவித்தார்.



முன்னாள் முதலமைச்சர் கலைஞர் 2018ம் ஆண்டு ஆகஸ்ட் 7ம் தேதி மறைந்தார். அவரது உடல் சென்னை மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிட வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது. 2021ம் ஆண்டு திமுக ஆட்சிக்கு வந்ததும் மெரீனாவில் கலைஞருக்கு தமிழக அரசு சார்பில் நினைவிடம் அமைக்க நிதி ஒதுக்கி முதல்வர் 110 விதியின் கீழ் சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிட்டார். பொதுப் பணித் துறையால் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் கட்டுமான பணிகள் முடிவடைந்ததை அடுத்து, பிப்ரவரி 26ம் தேதி கலைஞர் நினைவிடம் திறந்து வைக்கப்பட உள்ளது.

# புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா – கவிஞர் கவி.முருகபாரதி பங்கேற்பு

புதுக்கோட்டை ,பிப்.23-

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில் மழலை மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா நடைபெற்றது, பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி விழாவுக்கு தலைமை ஏற்றார், கவிஞர் எழுத்தாளர் தன்னம்பிக்கைப் பேச்சாளர் கவி.முருகபாரதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்.




அவர் பேசும்போது "ஒரு பெயர் அடையாள அட்டையில் இருந்தால் அந்த நபர் பள்ளியில் மாணவராகவோ, அலுவலக பணியாளராகவோ இருப்பார். அந்தப் பெயர் ஒரு மேசையின்மீது இருந்தால் அவர் அதிகாரியாக இருப்பார் அந்தப்பெயர் ஒரு கட்டிடத்தில் பொறிக்கப் பட்டடிருந்தால் அவர் ஒரு முதலாளியாக இருப்பார் ஒரு தெருவுக்கு அந்தப் பெயர் சூட்டப்பட்டிருந்தால் அவர் ஒரு தியாகியாக, தலைவராக, இருப்பார், அப்படிப்பட்ட பண்புள்ள தலைவர்களாக, அறிஞர்களாக உங்கள் குழந்தைகள் வளர வேண்டும். ஒரு விதை நல்ல வளமான இடத்தில் விதைக்கப்பட்டால் அது நல்ல பயனுறு மரங்களை தரும், அப்படித்தான் நீங்கள் உங்கள் குழந்தைகளை ஒரு நல்ல இடத்தில் வெங்கடேஸ்ரா பள்ளியில் சேர்த்திருக்கின்றீர்கள்.

உலப்புகழ்பெற்ற ஓவியர் பிக்காசோ இல்லத்துக்குச் சென்ற ஒருவர் அவரின் ஒரு ஓவியம் கூட அங்கு இல்லாதது கண்டு பிகாசோவிடம் வினவினார் அதற்கு பிகாசோ இப்படிச் சொன்னார். பிகாசோவின் ஓவியங்களை வைத்துக்கொள்கின்ற அளவிற்கு நான் வசதிபடைத்தவன் அல்லன் என்று பிகாசோவே சொன்னாராம், ஆக நம்முடைய பெருமையை முதலில் நாம் உணரவேண்டும் மதிப்பளிக்க வேண்டும், பெற்றோர்கள் உங்கள் கனவுகளை குழந்தைகளிடம் திணிக்காதீர்கள். அவர்களின் ஆசைப்படி அவர்களை வளரவிடுங்கள், இன்று பட்டம் பெற்றிருக்கின்ற அனைத்து மழலை மாணவர்களுக்கும் என் வாழ்த்துகளை தெரிவிக்கிறேன் என்று பேசினார்.

விழாவில் பேராசிரியர் அய்யாவு, கவிஞர் மகாசுந்தர், மகாத்மா பள்ளி ரவிச்சந்திரன், பாவேந்தர் பள்ளி காசிநாதன், பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, கோமதிபிள்ளை, மழலையர் ஆசிரியைகள் சந்திரகலா, பவுலின் மற்றும் பள்ளியின் மேலாளர் ராஜா, ஆசிரியர்கள் உதயகுமார்; ராமன் உள்ளிட்ட

ஆசிரியப் பெருமக்களும் பெற்றோர்களும் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ஆசிரியர்கள்; அட்சயா, சுபஸ்டி ஆகியோர் தொகுத்து வழங்கினர். முன்னதாக யுகேஜி மாணவர் அர்ஜுன் சேகர் வரவேற்க, நிறைவாக யுகேஜி மாணவி மஹிதா நன்றி கூறினார்.

# திருவண்ணாமலை அருகே காரும் டிராக்டரும் மோதிய விபத்தில் 4 மாணவர்கள் பலி

திருவண்ணாமலை : பிப். 23–

திருவண்ணாமலை அருகே நேற்று அதிகாலையில் டிராக்டர் மீது கார் மோதிய விபத்தில் 4 மருத்துவக்கல்லூரி மாணவர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.



திருவண்ணாமலையில் இருந்து திண்டிவனம் நோக்கி 4 பேர், காரில் சென்றுக் கொண்டிருந்தனர். அப்போது பென்னாத்தூர் பகுதியில் சென்ற போது, எதிர்பாராத விதமாக முன்னால் சென்ற டிராக்டரின் மீது அதிவேகத்தில் கார் மோதியது. பின்னர், சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தனர். இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கீழ்பென்னாத்தூர் போலீஸார், 4 பேரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்..

மேலும், இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். ஆந்திர மாநிலம் பதிவெண் கொண்ட இந்த காரில் பயணித்தவர்கள், நால்வரும் மருத்துவ கல்லூரி மாணவர்கள் என்று போலீஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. நேற்று அதிகாலை 3 மணிக்கு நடந்த விபத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# அமரடக்கி புன்னகை அறக்கட்டளை சார்பாக உலகத்தாய்மொழி தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மரகன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி

திருப்பெருந்துறை : பிப். 23–

புதுக்கோட்டை மாவட்டம், திருப்பெருந்துறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மு.லட்சுமிகாந்தன் தலைமையில், புன்னகை அறக்கட்டளை நிறுவனர் ஆ.சே. கலைபிரபு, தலைமை ஆலேசனை குழு தலைவர் பழனிதேவா முன்னிலையில் புன்னகை அறக்கட்டளை சார்பாக உலகதாய்மொழி தினத்தை முன்னிட்டு, தமிழ்மரம் நட்டல் திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 500க்கும் மேற்பட்ட பலவகை மரகன்றுகள் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர் திரைபட நடிகர் தேவா கலந்து கொண்டு நிகழ்வை தொடங்கி வைத்தார். இதில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மரம் வளர்க்க விழிப்புணர்வு மற்றும் உலக தாய்மொழி தமிழ்மொழி பற்றி மனிதனுக்கு தாய்மொழி அவசியத்தை எடுத்து கூறினர். தமிழ்மரம் நட்டல்திட்ட மாவட்டதலைவர் அழகு கூத்தையா, செயற்குழு உறுப்பினர் தாழனூர் விஜயகாந்த் மற்றும் பள்ளி இருபால் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஊக்கமருந்து விவகாரம் : தடகள வீராங்கனை அஞ்சலி தேவிக்கு 4 ஆண்டுகள் தடை



**சண்டிகர் : பிப். 23,**

**தடகள வீராங்கனை அஞ்சலி தேவிக்கு தேசிய ஊக்க மருந்து தடுப்பு ஆணையம் 4 ஆண்டுகள் தடை விதித்துள்ளது.**

அரியானா மாநிலத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை அஞ்சலி தேவி சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு ஆணையத்தால் தடை செய்யப்பட்ட மருந்துகளின் பட்டியலில் உள்ள ஊக்கமருந்தை பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடத்தப்பட்ட சோதனையில், அவர் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தியிருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில், அஞ்சலி தேவிக்கு 4 ஆண்டுகள் தடை விதித்து தேசிய ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் (NADA) உத்தரவிட்டுள்ளது. இந்த தடைக்காலத்தில் அவரால் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க முடியாது. இதற்கு முன் அஞ்சலி தேவி கடந்த 2019-ம் ஆண்டு நடைபெற்ற தோகா சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை : ஜெய்ஸ்வால் 15-வது இடத்துக்கு முன்னேற்றம்



**துபாய் : பிப். 23,**

**ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் பேட்ஸ்மேன்களுக்கான தரவரிசைபட்டியலில் இந்திய அணியின் தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 14 இடங்கள் முன்னேறி 15-வது இடத்தை பிடித்துள்ளார்.**

டெஸ்ட் கிரிக்கெட் பேட்ஸ்மேன்கள், பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தொடர்ச்சியாக இரண்டு இரட்டை சதங்கள் விளாசிய இந்திய அணியின் தொடக்க வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் 14 இடங்கள் முன்னேற்றம் கண்டு 15-வது இடத்தை பிடித்துள்ளார்.

22 வயதான இடது கை பேட்ஸ்மேனான ஜெய்ஸ்வால், இங்கிலாந்து அணிக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 209 ரன்களும், ராஜ்கோட்டில் நடைபெற்ற 3-வது டெஸ்ட் போட்டியின் 2-வது இன்னிங்ஸில் 214 ரன்களையும் விளாசியிருந்தார். இதன் மூலம் தொடர்ச்சியாக இரண்டு இரட்டை சதங்களை விளாசிய 7-வது வீரர் என்ற சாதனையையும் ஜெய்ஸ்வால் படைத்திருந்தார்.

ராஜ்கோட் போட்டியில் ஆட்ட நாயகன் விருது வென்றிருந்த இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 41-வது இடத்தில் இருந்து 34-வது இடத்துக்கு முன்னேறி உள்ளார். அவர், ராஜ்கோட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 112 ரன்கள் விளாசியிருந்தார். இதே போட்டியில் 131 ரன்கள் விளாசியிருந்த கேப்டன் ரோஹித் சர்மா ஒரு இடம் முன்னேறி 12-வது இடத்தில் உள்ளார். 2-வது இன்னிங்ஸில் 91 ரன்கள் விளாசிய ஷுப்மன் கில் 3 இடங்கள் முன்னேறி 35-வது இடத்தை பிடித்துள்ளார்.

அறிமுக வீரர்களான சர்பராஸ் கான், துருவ் ஜுரெல் ஆகியோரும் தரவரிசை பட்டியலில் நுழைந்துள்ளனர். இரு இன்னிங்ஸிலும் அரைசதம் அடித்த சர்பராஸ்கான் 75-வது இடத்தையும், விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான துருவ் ஜுரெல் 100-வது இடத்திலும் உள்ளனர். சொந்த காரணங்களுக்காக இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் கலந்துகொள்ளாத நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி 7-வது இடத்தில் தொடர்கிறார்.

ராஜ்கோட் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 153 ரன்கள் விளாசிய இங்கிலாந்து அணியின் தொடக்க வீரரான பென் டக்கெட் 12 இடங்கள் முன்னேறி 13-வது இடத்தை அடைந்துள்ளார். தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயல்பட்ட நியூஸிலாந்தின் கேன் வில்லியம்சன் 893 புள்ளிகளுடன் வலுவாக முதலிடத்தில் உள்ளார். ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் 2-வது இடத்திலும், நியூஸிலாந்தின் டேரில் மிட்செல் 3-வது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய அணியின் ஜஸ்பிரீத் பும்ரா 876 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். ராஜ்கோட் டெஸ்ட் போட்டியில் இரு இன்னிங்ஸையும் சேர்த்து கூட்டாக 7 விக்கெட்கள் வீழ்த்திய ரவீந்திரஜடேஜா 3 இடங்கள் முன்னேறி 789 புள்ளிகளுடன் 6-வது இடத்தை பிடித்துள்ளார். ரவிச்சந்திரன் அஸ்வின் ஒரு இடம் முன்னேறி 839 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். ஆல்ரவுண்டருக்கான தரவரிசை பட்டியலில் ஜடேஜா 469 புள்ளிகளுடன் முதலிடத்திலும், அஸ்வின் 330 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும் உள்ளனர்.

# காஷ்மீரில் உள்ளூர் இளைஞர்களுடன் தலைகீழாக பேட் பிடித்து கிரிக்கெட் விளையாடிய சச்சின்



**குல்மார்க் : பிப். 23,**

**எல்லை கட்டுப்பாட்டு கோட்டின் கடைசி பகுதியான அமன் சேதுவுக்கு அருகில் ராணுவ வீரர்களுடன் சச்சின் டெண்டுல்கர் கலந்துரையாடினார்.**

கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெற்றபிறகும் ரசிகர்களின் அன்பும், பாசமும் மாறாமல் அப்படியே உள்ளது. அவர் எங்கு பயணம் மேற்கொண்டாலும் ரசிகர்கள் அவரை வாழ்த்தி முழக்கமிடுவதுடன் அவருடன் புகைப்படம் எடுத்தும், கிரிக்கெட் விளையாடியும் மகிழ்கின்றனர்.

இந்நிலையில், சச்சின் தனது மனைவி அஞ்சலி, மகள் சாரா ஆகியோருடன் கடந்த சில தினங்களாக ஜம்மு காஷ்மீரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த பயணத்தின்போது பல்வேறு சுற்றுலா தலங்களுக்கு சென்ற அவர், உள்ளூர் ரசிகர்கள், சிறுவர்களுடன் கிரிக்கெட் விளையாடி மகிழ்கிறார்.

அவ்வகையில், குல்மார்க் பகுதிக்கு சென்றபோது உள்ளூர் இளைஞர்களுடன் சாலையில் கிரிக்கெட் விளையாடினார். சச்சினுக்கு ஒரு பந்துவீச்சாளர் பந்து வீசினார். முதல் 5 பந்துகளையும் சச்சின் சரியாக அடித்தார். பின்னர் மட்டையை தலைகீழாக பிடித்த சச்சின், கடைசி பந்தில் என்னை அவுட் ஆக்குங்கள் பார்க்கலாம், என சவால் விட்டார். ஆனால் இந்த முறையும் அவரை பந்துவீச்சாளரால் அவுட் ஆக்க முடியவில்லை. கடைசி பந்தை மட்டையின் கைப்பிடியால் துல்லியமாக தடுத்தார் சச்சின். பின்னர் உள்ளூர் ரசிகர்கள் அனைவருடனும் செல்பி எடுத்து மகிழ்ந்தார்.

இந்த மகிழ்ச்சியான தருணம் தொடர்பான வீடியோவை சச்சின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார். ‘கிரிக்கெட் மற்றும் காஷ்மீர்: சொர்க்கத்தில் ஒரு போட்டி!’ என அந்த வீடியோவுக்கு தலைப்பிட்டுள்ளார். இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

நேற்று முன்தினம் புதன்கிழமை ஜம்மு காஷ்மீரின் உரி செக்டாரில் உள்ள எல்லை கட்டுப்பாட்டு கோட்டின் கடைசி பகுதியான அமன் சேது பாலத்தை சச்சின் பார்வையிட்டார். அமன் சேதுவுக்கு அருகில் உள்ள கமான் முகாமில் உள்ள ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார். ஸ்ரீநகர்-ஜம்மு தேசிய நெடுஞ்சாலையில் சுர்சூ என்ற இடத்திற்கு சென்ற சச்சின், கிரிக்கெட் மட்டை தயாரிக்கும் கூடத்தை பார்வையிட்டார்.

# சுழலுக்கு சாதகமான ராஞ்சி ஆடுகளம் : பும்ராவுக்கு ஓய்வு எனில், இந்திய அணியின் அடுத்த திட்டம்



**ராஞ்சி : பிப். 23,**

**ராஞ்சியில் நடைபெறும் இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 4-வது டெஸ்ட் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் ராஞ்சி பிட்சை முழுவதும் குழிப்பிட்ச் ஆகப் போடுவதன் சூட்சுமம்தானோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது.**

3 டெஸ்ட் போட்டிகளில் 17 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ள பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்படுகிறது என்றால் அவருக்குப் பதில் இன்னொரு வேகப்பந்து வீச்சாளர் வருவார் என்று நினைப்பது ஒரு பக்கம் இருந்தாலும், ராஞ்சி பிட்சைப் பற்றி வரும் தகவல்கள் அது ஒரு குழிப்பிட்ச் என்றே தெரியப்படுத்துகிறது.

ஆலி போப் பிட்சைப் பற்றிக் கூறும்போது “பார்ப்பதற்கு பேட்டிங் பிட்ச் போல் தோன்றினாலும் வலது கை பேட்டரின் ஆஃப் ஸ்டம்புக்கு வெளியே பிட்சில் பெரிய பிளவுகள் உள்ளன. இது எப்போது வேண்டுமானாலும் உடையும். அதேபோல் இன்னொரு முனையில் இடது கை பேட்டரின் ஆஃப் ஸ்டம்பிற்கு வெளிப்பகுதி பந்துகள் பிட்ச் ஆகும் இடத்தில் பிளவுகள் உள்ளன” என்கிறார். ஆகவே ஜடேஜா, குல்தீப், அஸ்வின் ஆகியோரோடு அக்சர் படேலையும் இணைத்துக் கொள்வார்கள் என்றே தெரிகிறது. அல்லது வாஷிங்டன் சுந்தருக்கு வாய்ப்பு அளிக்கப்படலாம்.

2016-17 ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் ராஞ்சி பிட்ச் மிகவும் மட்டையாக இருந்தது. பந்துகள் ஒன்றுமே ஆகாமல் மெதுவாக வந்தன. இரு அணிகளும் அதிக ஸ்கோர்களை எடுத்தனர். முதலில் பேட் செய்த ஆஸ்திரேலிய அணியில் ஸ்டீவ் ஸ்மித் 178 ரன்கள் நாட் அவுட், கிளென் மேக்ஸ்வெல் 104 அடிக்க 451 ரன்களை ஆஸ்திரேலியா எடுக்க, பதிலுக்கு இந்திய அணியில் புஜாரா 202 ரன்களைக் குவிக்க, இப்போது மறக்கடிக்கப்பட்ட, பிசிசிஐ-யினால் ஒழுங்காக நடத்தப்படாத விருத்திமான் சஹா 117 ரன்களை எடுத்தார். முரளி விஜய் 82, ராகுல் 67 என்று இந்தியா 603/9 டிக்ளேர் செய்தது. ஆஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்சில் 204/6 என்று முடிய ஆட்டம் டிரா ஆனது.

ஆனால் 2019-20ல் தென் ஆப்பிரிக்கா வந்தபோது அவ்வளவு நல்ல பிட்ச் அல்ல. அதாவது டாஸ் வென்றால் ஓரளவுக்கு பேட்டிங் ஆடலாம். இரண்டாவதாக பேட்டிங் ஆடினால் பந்துகளின் நடனத்திற்கு ஏற்ப பேட்டர்களின் நடனம் அமையும் என்று இருந்தது.

இந்தியா முதலில் பேட் செய்தது. ரோஹித் சர்மா 255 பந்துகளில் 212 ரன்களை 28 பவுண்டரிகள் 6 சிக்சர்களுடன் விளாசித் தள்ளினார். ரஹானே 115 ரன்கள், ஜடேஜா 51 ரன்கள் என்று எடுக்க இந்தியா 497 ரன்களைக் குவித்தது. ஆனால், தென் ஆப்பிரிக்கா முதல் இன்னிங்சில் 162 ரன்களுக்குச் சுருண்டது. பின்னர் ஃபாலோ ஆன் ஆடி 133 ரன்களுக்குச் சுருண்டது. தென் ஆப்பிரிக்க அணியில் டி காக், எல்கர், டுபிளெசிஸ், பவுமா போன்றவர்கள் இருந்தும் இன்னிங்ஸ் தோல்வி.

இந்த முறை இங்கிலாந்துக்கும் பந்துகள் திரும்பும், அதாவது ஸ்பின்னர்களை முதல் 10 ஓவர்களுக்குள்ளேயே கொண்டு வரும்படியான பிட்ச்தான் அமைக்கப்படும் என்று தெரிகிறது. இந்திய அணி நிர்வாகமும் ஸ்பின் பிட்சை கேட்டதாகத்தான் தெரிகிறது.

ஏனெனில் முதல் 3 டெஸ்ட் போட்டிகளில் ஓரளவுக்கு இரு அணிகளுக்கும் சாதகமான பிட்ச்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இது போதும் என்று கூறிவிட்டாரோ ரோஹித் சர்மா. இதற்காகத்தான் ஆசைப்பட்டாயா பாலகுமாரா என்று இங்கிலாந்து கேட்கும் வண்ணம் பும்ராவை உட்கார வைக்கும் போதே இந்திய அணி நிர்வாகத்தின் நோக்கம் புரிந்து விட்டது.

அல்லது வேகப்பந்து வீச்சாளர் இன்னொருவர் தேவை என்று கருதினால் ரஜத் படிதாரைத் தூக்கி விட்டு அந்த இடத்தில் முகேஷ் குமாரை களமிறக்கலாம். அதான் பேட்டிங்கில் அக்சர் படேல், ஜடேஜா, அஸ்வின் போன்றோர் ஆட முடியுமே. ராகுல் வேறு வந்து விடுகிறார். அதனால் இதற்கு வாய்ப்பில்லை.

ரோஹித் சர்மா, ஜெய்ஸ்வால், ஷுப்மன் கில், கே.எல்.ராகுல், சர்பராஸ் கான், ஜுரெல், ஜடேஜா, அஸ்வின், அக்சர் படேல், குல்தீப் யாதவ், சிராஜ் என்றுதான் அணி வரிசை இருக்கும். குல்தீப் யாதவ் வேண்டாம் குழிப்பிட்ச்தானே அக்சர், அஸ்வின், ஜடேஜாவே முடித்து விடுவார்கள் என்று நினைத்தால் ரஜத் படிதாரையும் அணியில் வைத்துக் கொள்ள வாய்ப்புள்ளது.

வரலாறு சினிமா

# சர்ச்சை பேச்சு விவகாரம் : அதிமுக முன்னாள் நிர்வாகிக்கு த்ரிஷா நோட்டீஸ்



**சென்னை : பிப். 23,**

**தன்னைப் பற்றி சர்ச்சையாக பேசிய அதிமுக முன்னாள் நிர்வாகி ஏ.வி. ராஜுவுக்கு நடிகை த்ரிஷா நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.**

சேலம் மேற்கு ஒன்றிய அதிமுக செயலாளராக இருந்த ஏ.வி.ராஜு அண்மையில் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். இதனையடுத்து யூடியூப் பேட்டி ஒன்றில் பேசிய ஏ.வி.ராஜு, கூவத்தூர் சம்பவம் குறித்து சில சர்ச்சையான கருத்துகளை பகிர்ந்தார். அதில் நடிகை த்ரிஷா குறித்து பேசிய கருத்துகள் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. அவர் பேசிய காணொலி சமூக வலைதளங்களில் வைரலானதை அடுத்து திரையுலகைச் சேர்ந்த பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக, நடிகை த்ரிஷா தனது எக்ஸ் தள பக்கத்தில், “இனிமேல் சட்டரீதியாகத்தான் எல்லாவற்றையும் சொல்லபோகிறேன்” என்று கொந்தளிப்புடன் பதிவிட்டிருந்தார். இதனையடுத்து வீடியோ ஒன்றை வெளியிட்ட ஏ.வி.ராஜு, அதில் தான் பேசியது தவறாக சித்தரிக்கப்பட்டதாகவும், த்ரிஷாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், முன்னாள் அதிமுக பிரமுகர் ஏ.வி.ராஜுவுக்கு த்ரிஷாவின் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அதில், அடுத்த 24 மணி நேரத்துக்குள் த்ரிஷா குறித்து இணையத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், சமூக வலைதளங்களில் வீடியோ மற்றும் எழுத்து வடிவில் இருக்கும் அத்தனை அவதூறுகளையும் நீக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் அடுத்த நான்கு நாட்களுக்குள் இது குறித்து பதில் அளிக்குமாறும், த்ரிஷாவுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடு வழங்குமாறும் அந்த நோட்டீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருமண ஆல்பத்தைப் பகிர்ந்த ரகுல் ப்ரீத் சிங்



**கோவா : பிப். 23,**

**கோவாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை திருமணம் நடந்த நிலையில், நடிகை ரகுல் ப்ரீத் சிங் கணவருடனான தனது மகிழ்ச்சியான தருணங்களைப் பகிர்ந்துள்ளார். இந்த புதுமண ஜோடிக்கு ரசிகர்கள் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.**

நடிகை ரகுல் ப்ரீத் சிங் - ஜாக்கி பக்னானி திருமண செய்திதான் கடந்த சில நாட்களாக ரசிகர்கள் மத்தியில் பேசு பொருளாக உள்ளது. தமிழில் ‘தேவ்’, ‘அயலான்’ போன்ற படங்களில் நடித்தவர் நடிகை ரகுல். விரைவில் வெளிவர இருக்கும் ‘இந்தியன்2’ படத்திலும் அவர் நடித்துள்ளார். கோவாவில் இயற்கைச் சூழலில் ரகுல்-ஜாக்கி திருமணம் நடைபெற்றது. திரையுலகில் முக்கிய பிரபலங்கள், நண்பர்கள், நெருங்கிய உறவினர்கள் மட்டுமே இவர்களது திருமணத்தில் கலந்து கொண்டனர்.

திருமணத்தில் சர்க்கரை, குளுட்டோன் இல்லாத உணவு வகைகள், வாழ்த்த வந்தவர்களுக்கு சூழலுக்கு மாசு இல்லாத பரிசுகள், ஆன்லைன் அழைப்பிதழ் என இவர்களது திருமண ஏற்பாடுகளுமே சூழலுக்கு தீங்கில்லாத வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதுவும் ரசிகர்கள் மத்தியில் வைரலானது.

இந்த நிலையில், தன்னுடைய திருமணப் புகைப்படங்களை நடிகை ரகுல் சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். ’இனி எப்போதும் என்னுடையவன்’ எனத் தன்னுடைய கணவர் மீதான அன்பையும் கேப்ஷனில் வெளிப்படுத்தி திருமணத் தேதியையும் குறிப்பிட்டுள்ளார் ரகுல்.

இந்த ஜோடிக்கு ரசிகர்கள் மட்டுமல்லாது நயன்தாரா, சமந்தா, ஜெனிலியா, பரினிதி சோப்ரா எனத் திரையுலகப் பிரபலங்கள் பலரும் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

# கரீனா கபூர் வீட்டு விசேஷத்துக்கு மகளுடன் வந்த ரன்பீர் கபூர்



**மும்பை : பிப். 23,**

**நடிகை கரீனா கபூரின் மகன் பிறந்தநாளுக்குத் தனது மகள் ராஹாவுடன் ரன்பீர் கபூர் வந்திருக்கிறார். அப்பா-மகளின் கியூட்டான இந்த வீடியோதான் இணையத்தில் தற்போது டிரெண்டாகியுள்ளது.**

நடிகை கரீனா கபூர்-சைஃப் அலிகான் மகன் ஜாஹாங்கீர் அலியின் பிறந்தநாள் கொண்டாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடந்தது. ஜஹாங்கீரின் இந்த மூன்றாவது பிறந்தநாளை ஸ்பைடர்மேன் தீமில் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் கொண்டாடி இருக்கிறது கரீனா கபூர் குடும்பம். இந்த பிறந்தநாள் விழாவுக்குத்தான் ரன்பீர் தனது மகள் ராஹாவுடன் வந்திருக்கிறார். அப்பா-மகள் இருவரும் ஒரே நிறத்தில் ஆடை அணிந்திருக்கிறார்கள். கரீனா கபூரும் ராஹாவை அன்போடு வரவேற்று கொஞ்சி இருக்கிறார். ரன்பீர்-ராஹாவின் கியூட் வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது.

அலியாபட்டுக்கும், ரன்பீர் கபூருக்கும் கடந்த 2022ம் ஆண்டு காதல் திருமணம் நடந்தது. ‘பிரம்மாஸ்த்ரா’ படத்தின் போது இந்த ஜோடி இடையே காதல் மலர்ந்ததாக சொல்லப்படுகிறது. 2022, ஏப்ரலில் திருமணம் நடக்க, அதே ஆண்டு நவம்பர் மாதத்திலேயே ராஹா என்ற பெண் குழந்தைக்கு தாயானார் அலியா.

திருமணம், குழந்தை என எதற்கும் பிரேக் எடுக்காமல் சினிமாவிலும் பிஸியாக நடித்துக் கொண்டே இருக்கிறார். கடந்த வருடம் அவரது நடிப்பில் வெளியான ‘ராக்கி அவுர் ராணி கி பிரேம் கஹானி’ படம் வெற்றியடைந்தது. இதனை அடுத்து குழந்தை பிறந்து ஒரு வருடம் ஆக இருக்கும் நிலையில், முதல்முறையாக கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக தங்கள் குழந்தையை பொதுவெளியில் இந்த ஜோடி காட்டியது குறிப்பிடத்தக்கது.

# சிவகார்த்திகேயன், தனுஷ் பட இயக்குநருடன் கைகோத்த லெஜண்ட் சரவணன்



**சென்னை : பிப். 23,**

**‘தி லெஜண்ட்’ படத்தில் நடித்ததன் மூலம் திரையுலகில் நாயகனாக அறிமுகம் ஆனவர் தொழிலதிபர் அருள் சரவணன். அவரது அடுத்த படத்தை துரை செந்தில்குமார் இயக்குவதாக தகவல் வெளியாகியுள்ளது.**

‘எதிர்நீச்சல்’, ‘காக்கிச் சட்டை’, ‘கொடி’, ‘பட்டாசு’ படங்களை இயக்கிய துரை செந்தில்குமார் தற்போது சூரி நடிப்பில் உருவாகி வரும் ‘கருடன்’ படத்தை இயக்கி முடித்துள்ளார். இதையடுத்து அவர் லெஜண்ட் சரவணனை வைத்து புதிய படம் ஒன்றை இயக்குகிறார். இப்படத்தின் பணிகள் ஏப்ரல் மாதம் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது.

‘கொடி’ படத்துக்கு ஒளிப்பதிவு செய்த வெங்கடேஷ் இந்தப் படத்துக்கும் ஒளிப்பதிவு செய்ய உள்ளதாகவும், ஜிப்ரான் இசையமைப்பார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தெரிகிறது.

ஜேடி-ஜெர்ரி இயக்கத்தில் கடந்த 2022-ம் ஆண்டு வெளியான படம் ‘தி லெஜண்ட்’. இந்தப் படத்தில் அருள் சரவணன், விவேக், நாசர், சுமன் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்திருந்தார். இப்படம் எதிர்மறை விமர்சனங்களைப் பெற்றது. இந்நிலையில், தற்போது தனது இரண்டாம் படத்தில் அருள் சரவணன் நடிக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பணம் கொடுத்து பப்ளிசிட்டி : பிரியாமணி பகிர்ந்த தகவல்



**சென்னை : பிப்.23,**

**சினிமாத்துறையில் பிரபலமாக வேண்டும் என்பதையும் தாண்டி பணத்தை இறைத்து வேறு சில விஷயங்களும் செய்ய வேண்டும் என்பதைக் கேள்விப்பட்டபோது ஆச்சரியமாக இருந்தது என நடிகை பிரியாமணி கூறியுள்ளார்.**

தமிழில் ‘கண்களால் கைது செய்’ படம் மூலம் அறிமுகமான பிரியாமணிக்கு ‘பருத்திவீரன்’ படம் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அதன் பிறகு பல படங்களில் நடித்த பிரியாமணி தற்போது பாலிவுட்டில் கவனம் செலுத்திவருகிறார். சமீபத்தில் இவர் ‘ஃபேமிலிமேன்’ வெப் சீரிஸிலும், அட்லி இயக்கத்தில் ‘ஜவான்’ படத்திலும் நடித்திருந்தார். இந்த நிலையில், தான் கேள்விப்பட்ட விஷயம் ஒன்றை ஆச்சரியமாகப் பகிர்ந்துள்ளார் பிரியாமணி.

”பாலிவுட் நடிகர், நடிகைகள் ஏர்போர்ட், ஷூட்டிங் ஸ்பாட், ஜிம் என அவர்கள் போகும் இடங்களில் எல்லாம் புகைப்படங்கள், வீடியோக்கள் டிரெண்டாகிறது. ஆனால், என்னை ஏன் அப்படி யாரும் எடுப்பதில்லை என என் நண்பர் ஒருவரிடம் கேட்டேன். அப்போதுதான் அவர் ‘பப்பராஸி’ புகைப்படக் கலைஞர்கள் பற்றி என்னிடம் கூறினார்.

அதாவது, பாலிவுட்டில் உள்ள சில நடிகைகள், தாங்கள் செல்லும் இடங்கள் குறித்து குறிப்பிட்ட ஏஜென்சிகளிடம் முன்னதாகவே சொல்லி விடுவார்கள். அவர்கள் சொன்ன தகவல்படி அந்த ஏஜென்சி, தங்களது புகைப்பட கலைஞர்களை அந்த இடங்களுக்கு அனுப்பி புகைப்படம், வீடியோ எடுத்து இணையத்தில் வைரலாக்கி விடுவார்கள். இதனை எதேச்சையாக எடுத்தது போலவும் குறிப்பிடுவார்கள்.

இதற்கு குறிப்பிட்ட அந்த நடிகர்கள் பணமும் கொடுக்கிறார்கள். இது சரி, தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், இந்தத் தகவல் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னிடம் கேட்டபோது, நான் மறுத்துவிட்டேன்” என்று சொல்லி இருக்கிறார் பிரியாமணி.

# முடிவுக்கு வந்த இழுபறி : பாகிஸ்தானில் மீண்டும் பிரதமராகும் ஷெபாஸ் ஷெரீப்



**இஸ்லாமாபாத் : பிப். 23, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான புதிய அரசு பாகிஸ்தானில் விரைவில் பதவியேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

பொருளாதார நெருக்கடியில் தவித்து வரும் பாகிஸ்தானில் கடந்த 8-ந்தேதி நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. 265 தொகுதிகளுக்கு தேர்தல் நடந்தநிலையில்3நாட்களுக்கு பிறகு முழுமையான தேர்தல் முடிவுகள் வெளியாகின. இதில், ஊழல் வழக்குகளில் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியின் ஆதரவு பெற்ற 93 சுயேச்சைகள் வெற்றி பெற்றனர்.

3 முறை பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி 75 இடங்களிலும், முன்னாள் பிரதமர் பெனாசிர் புட்டோவின் மகன் பிலாவல் சர்தாரி பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களிலும் வென்றன. மற்ற இடங்களை சிறிய கட்சிகள் கைப்பற்றின. ஆட்சி அமைப்பதற்கு 133 இடங்கள் தேவை என்கிற நிலையில், எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய ஒற்றுமை அரசை நிறுவ அரசியல் கட்சிகளுக்கு நவாஸ் ஷெரீப் அழைப்பு விடுத்தார்.

ஆனால் இம்ரான்கான் கட்சி கூட்டணிக்கான அழைப்பை நிராகரித்து எதிர்க்கட்சி வரிசையில் அமர முடிவு செய்தது. அதனை தொடர்ந்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இணைந்து கூட்டணி அரசை அமைக்க முடிவு செய்தன. ஆனால் அதிகாரப்பகிர்வு தொடர்பான ஒப்பந்தத்தை எட்டுவதில் இருதரப்புக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நிலவின. இது தொடர்பாக இரு கட்சிகளும் பல்வேறு சுற்றுகளாக பேச்சுவார்த்தை நடத்தின.

ஆனால் எந்த முன்னேற்றமும் ஏற்படாததால் புதிய அரசை அமைப்பதில் தொடர்ந்து இழுபறி நீடித்தது. இதனிடையே வருகிற 29-ந் தேதி நாடாளுமன்றம் தனது முதல் கூட்டத்தொடரை கூட்ட வேண்டும் என்கிற சூழலில் இரு கட்சிகளும் பேச்சுவார்த்தையை தீவிரப்படுத்தின.

அந்த வகையில் கடந்த செவ்வாய்கிழமை இரு கட்சிகளுக்கு இடையே தொடர்ந்து பல சுற்றுகளாக பேச்சுவார்த்தை நடந்தது. இதில் கூட்டணி அரசை அமைப்பதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.இருகட்சிகளும் இதை அதிகாரப்பூர்வமாக அறிவித்தன.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ஷபாஸ் ஷெரீப் (வயது 72) மீண்டும் பிரதமராக பதவியேற்பார் என்றும், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத் தலைவர் ஆசிப் அலி சர்தாரி (68) அதிபர் பதவிக்கான தேர்தலில் இரு கட்சிகளின் கூட்டு வேட்பாளராக களமிறக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாகிஸ்தானில் புதிய அரசை அமைப்பதில் நீடித்து வந்த இழுபறி முடிவுக்கு வந்துள்ளது. பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) மற்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான புதிய அரசு விரைவில் பதவியேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உக்ரைனுக்கு எதிராக போலந்து விவசாயிகள் போராட்டம்

## தீர்வு காண அரசியல் தலைவர்களுக்கு ஜெலன்ஸ்கி அழைப்பு



**கீவ் : பிப். 23, போலந்து விவசாயிகள் உக்ரைனுக்கு செல்லும் சாலைகளை மறித்து போக்குவரத்தை தடை செய்தனர். சிலர் ரஷிய அதிபர் புதினுக்கு ஆதரவாக முழக்கமிட்டனர்.**

உக்ரைன் மீது ரஷியா தனது முழு அளவிலான ராணுவ நடவடிக்கையை தொடங்கிஇரண்டு ஆண்டுகள் நிறைவடைய உள்ளது. போர் தொடங்கியதில் இருந்தே அண்டை நாடான போலந்து, உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து வருகிறது. நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடான போலந்து, உக்ரைனில் இருந்து வந்த அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததுடன், உக்ரைனுக்கு ஆயுதங்களையும் வழங்கியது.

இந்நிலையில், உக்ரைனில் இருந்து தானியங்கள் மற்றும் பிற உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்வதால் தங்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக போலந்து விவசாயிகள் குற்றம்சாட்டி போராடத் தொடங்கியதில் இருந்து பிரச்சினை உருவானது. இந்த விவகாரம் நாளுக்குநாள் வலுத்து, பெரிய அளவில் வெடித்துள்ளது. செவ்வாய்கிழமை போலந்து விவசாயிகள் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்தினர். உக்ரைனுக்கு செல்லக்கூடிய அனைத்து சாலைகளையும் மறித்து போக்குவரத்தை தடை செய்தனர். அத்துடன் சிலர் ரஷிய அதிபர் புதினுக்கு ஆதரவாக முழக்கமிட்டனர். இந்த செயல் உக்ரைனின் கோபத்தை தூண்டும் வகையில் அமைந்தது. இதையடுத்து போலந்து விவசாயிகளின் பிரச்சினை குறித்து பேசுவதற்காக போலந்து தலைவர்களுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜெலன்ஸ்கி கூறியிருப்பதாவது:- இரு நாடுகளின் விவசாயிகளும் ஒருவரையொருவர் அவமதிக்கக்கூடாது. நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நம்மிடையே உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும். உக்ரைன் மற்றும் போலந்து இடையே மட்டுமல்லாமல் முழு ஐரோப்பா அளவிலும் தீர்வு தேவை. விவசாயிகளின் பிரச்சினை தொடர்பாக விவாதித்து தீர்வு காண்பதற்காக எல்லையில் ஆலோசனைக் கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரஷியா போர் தொடங்கி இரண்டு ஆண்டு நிறைவடைய (பிப்ரவரி 24) உள்ள நிலையில், அதற்கு முன்னதாக போலந்து பிரதமர் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி ஆகியோருடனான சந்திப்பு நடைபெறும் என நம்புகிறேன். இது தேசிய பாதுகாப்பு தொடர்பான விஷயம் என்று கூறினார்.

# எலான் மஸ்க்கிற்கு நோபல் பரிசு வழங்க பரிந்துரை



**நார்வே : பிப். 23, எக்ஸ் தளத்தின் நிறுவனர் எலான்மஸ்க்கிற்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் என நார்வே எம்.பி., மரியஸ் நில்சன் கோரிக்கை வைத்துள்ளார்.**

டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் தலைவரும் தொழிலதிபருமான எலான் மஸ்க் சமூக வலைத்தளமான டுவிட்டரை 2022- இல் வாங்கி எக்ஸ் என பெயர்மாற்றம் செய்தார். சுதந்திர பேச்சை வெளிப்படுத்த இதனை செய்ததாக அவர் குறிப்பிட்டார். மேலும், ரஷியா - உக்ரைன் போரில் உக்ரைன் ராணுவத்துக்கு செயற்கைக்கோள் வழி தொடர்பினை அவரது நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்தது.

இவற்றுக்காக எலான் பெயரை நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கலாம்எனமரியஸ் நில்சன் தெரிவித்ததாக பொலிட்கோ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. முற்போக்கு கட்சியை சேர்ந்த மரியஸ் நில்சன், ரஷியா - உக்ரைன் போரின் போது செயற்கைக்கோள் தகவல் தொடர்புகளை வழங்கியது, சுதந்திரமான பேச்சு மற்றும் திறந்த உரையாடலுக்கான ஆதரவுக்காக 2024-ம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை எலான் மஸ்க்கிற்கு வழங்க வேண்டும் என முன்மொழிந்துள்ளார்.

# பாலத்தில் மோதி நின்ற கப்பல் 2 பேர் உயிரிழப்பு



**சீனா : பிப். 23, சீனாவின் தெற்கு பகுதியில் உள்ள நகரம், குவாங்சோ. முக்கிய துறைமுக நகரமான இது, பெர்ல் நதியின் டெல்டா பகுதியில் உள்ளது.**

2004ல் குவாங்சோ பகுதியில் நான்ஷா மாவட்டத்தில் கப்பல்களில் சரக்குகளை ஏற்றி இறக்கும் தளம் ஒன்று உருவானது. 2021லேயே அங்குள்ள லிக்சின்சா பாலத்தில் கப்பல்கள் மோதாத வண்ணம் சீரமைக்க அப்பிராந்திய அதிகாரிகள் முடிவெடுத்தனர். ஆனால், சீரமைக்கும் பணிகள் பல காரணங்களுக்காக அது தள்ளி போடப்பட்டு வந்தன.

2020ல், 20 டன் வரை எடையுள்ள சுமையுடன் அந்த பாலத்தை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில், போசான் பகுதியிலிருந்து குவாங்சோ நோக்கி சென்ற ஒரு கப்பல், அந்த பாலத்தின் கீழே செல்லும் போது எதிர்பாராத விதமாக அதன் மீது மோதியது. இதில் அப்பாலத்திலிருந்து ஒரு பேருந்து உட்பட 5 வாகனங்கள் தண்ணீரில் விழுந்தன.

இச்சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்தனர்; ஒருவர் காயமடைந்தார். மேலும், 3 பேர் காணவில்லை. அவர்களை தேடும் பணிகள் நடைபெறுகிறது. இந்த மோதலால், பாலத்தின் ஒரு பகுதி உடைந்தது. பாலத்தின் உடைந்த பகுதிக்கு அருகே அந்த கப்பல் கீழே சிக்கிக் கொண்டது. விபத்தில் சிக்கிய அந்த கப்பலில் சரக்கு ஏதும் கொண்டு செல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக, அந்த கப்பலின் கேப்டன் விசாரிக்கப்பட்டு வருகிறார். கப்பலை பாலத்தின் கீழிருந்து வெளியே மீட்கும் பணி மும்முரப்படுத்துள்ளது. இதனால், விபத்து நடந்த பகுதியின் சுற்றுவட்டாரத்தில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

# 1.50 லட்சம் மாணவர்களின் கடன் ரத்து

## அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அதிரடி அறிவிப்பு



**அமெரிக்கா : பிப். 23, அமெரிக்காவில் 12 ஆயிரம் டாலருக்கும் குறைவாக கடன் பெற்று 10 ஆண்டுகளாக திருப்பிச் செலுத்தி வந்த 1,50,000 மாணவர்களின் கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.**

அமெரிக்காவில், புதிய திருப்பிச் செலுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்களின் கடனை ரத்து செய்வதாக அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். 'சேவ்' (பாதுகாப்பு) திட்டம் என்ற பெயரில் இந்த திட்டம் அழைக்கப்படும் என அறிவித்துள்ள ஜோ பைடன், இத்திட்டத்தின்படி மொத்தம் 1.2 பில்லியன் டாலர் மதிப்பிலான கடன்கள் ரத்து செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

'சேவ்' மாணவர் கடன் திருப்பிச் செலுத்தும் திட்டத்தில் பதிவுசெய்து, 12,000 டாலர் (ரூ.9,75,228) அல்லது அதற்கும் குறைவாக கடன்பெற்று 10 ஆண்டுகளாக திரும்ப செலுத்தி வரும் மாணவர்கள் கடன் ரத்துக்கு தகுதியுடையவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய பயனாளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்பப்பட்டு வருகிறது. தள்ளுபடி செய்யப்படும் கடனின் மொத்த மதிப்பு சுமார் 1.2 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எக்ஸ் வலைதளத்தில் ஜோ பைடன் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "எங்கள் 'சேவ்' மாணவர் கடன் திருப்பிச் செலுத்தும் திட்டத்தில் 10 ஆண்டுகளாக தங்கள் கடன்களை செலுத்தி, 12 ஆயிரம் டாலர் அல்லது அதற்கும் குறைவாக கடன் பெற்ற மாணவர்களுக்கு முதல் சுற்றாக கடன் ரத்து செய்யப்படுகிறது. இதன் மூலம் 1,50,000 அமெரிக்க மாணவர்கள் பயன்பெறுவர். மேலும் கூடுதல் மாணவர்களுக்கு கடன் ரத்து செய்ய நாங்கள் முயன்று வருகிறோம்" என குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜோ பைடனின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

# வெனிசுலா நாட்டில் தங்க சுரங்கம் இடிந்து 15 பேர் பலி



**கராகஸ் : பிப். 23, வெனிசுலா நாட்டில் சட்ட விரோதமாக தங்க சுரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் ஏராளமானோர் பணியாற்றி வருகிறார்கள்.**

இந்த நிலையில் அங்கோஸ்டுரா நகராட்சியில் புல்லாலோகா என்ற இடத்தில் சட்ட விரோதமாக இயங்கி வந்த திறந்தவெளி தங்கச் சுரங்கத்தில் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். அப்போது தங்கச் சுரங்கத்தில் ஒரு பாதி இடிந்து விழுந்தது. அதில் பல தொழிலாளர்கள் சிக்கி கொண்டனர். விபத்து நடந்த தங்கச் சுரங்கத்துக்கு ஆற்றில் படகில் ஒரு மணி நேரம் பயணம் செய்த பிறகே செல்ல முடியும். இதனால் மீட்புக் குழுவினர் உடனடியாக செல்ல முடியவில்லை. பின்னர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

தங்கச் சுரங்கத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் 15 பேர் பலியானார்கள். பலர் காயமடைந்து இருந்தனர். அவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இன்னும் சிலர் தங்கச் சுரங்கங்களில் சிக்கி உள்ளனர். அவர்களை மீட்கும் பணிநடந்துவருகிறது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்து அரசு அதிகாரப்பூர்வமாக இன்னும் அறிவிக்கவில்லை.

வெனிசுலாவில் கடந்த 2016-ம் ஆண்டு, புதிய வருவாய் திட்டமாக, நாட்டின் நடுப்பகுதி முழுவதும் ஒரு பெரிய சுரங்க மேம்பாட்டு மண்டலத்தை அந்நாட்டு அரசாங்கம் நிறுவியது. இதையடுத்து தங்கம், வைரங்கள், தாமிரம் மற்றும் பிற கனிமங்களுக்கான சுரங்க நடவடிக்கைகள் தொடங்கின. மேலும் அந்த மண்டலத்திற்கு வெளியே சட்டவிரோத சுரங்கங்கள் பெருகின என்பது குறிப்பிடத்தக்கது.

# செயலிழந்த செயற்கைகோள் பூமியில் விழும் அபாயம் ஐரோப்பா விண்வெளி நிறுவனம் அச்சம்



**பாரீஸ் : பிப். 23, செயற்கை கோளை கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் எங்கு விழும் என சொல்லமுடியவில்லை.**

கடந்த 1990-ம் ஆண்டில் ஓசோன் படலத்தை கண்காணிக்கும் வகையில் ஒரு செயற்கைகோளை ஐரோப்பா விண்வெளி ஆய்வு நிறுவனம் விண்ணில் செலுத்தியது. 'கிராண்ட்பாதர்' என பெயரிடப்பட்ட இந்த விண்கலனை ஐரோப்பா விண்வெளி நிறுவனம் கட்டுப்படுத்திவைத்திருந்தது. இதனையடுத்து அதன் ஆயுட்காலம் முடிவடைந்து தன்னுடைய சுற்றுப்பாதையை விட்டு விலகியது.

இந்நிலையில் கிராண்ட்பாதர் செயற்கைகோளின் உடைந்த பாகங்கள் பூமியின் மீது விழும் அபாயம் உள்ளதாக ஐரோப்பா விண்வெளி நிறுவன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த மாதம் இறுதிக்குள் அது பூமியில் விழலாம் என கணக்கிடப்பட்டு உள்ளது.

இதனை கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் எங்கு விழும் என சொல்லமுடியவில்லை. இருப்பினும் ஐரோப்பாவில் உள்ளகடல்களில்விழவைக்க முயற்சிகள் நடக்கின்றன. இதன் பெருமளவிலான பாகங்கள் எரிந்து சாம்பலாகிவிடும். ஆனால் சில பாகங்கள் வளிமண்டலத்தை தாண்டி பூமியில் விழும் வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

# 'அலெக்சி நவால்னி துணிச்சல் மிக்கவர்' அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டிரம்ப்





**வாஷிங்டன் : பிப். 23, அலெக்சி நவால்னி மீண்டும் ரஷியாவுக்கு சென்றிருக்கக் கூடாது என டொனால்டு டிரம்ப் தெரிவித்தார்.**

ரஷிய அதிபர் புதினையும், அவரது கொள்கைகளையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னி (வயது 47). இதனால் அங்குள்ள இளைஞர்கள் மத்தியில் இவர் மீதான ஆதரவு பெருகியது.

இதனையடுத்து கடந்த 2013-ல் அவர் மீது பணமோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கில் அவருக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பயங்கரவாதத்தை ஊக்குவித்தல், கோர்ட்டு அவமதிப்பு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் அவருக்கு மொத்தம் 19 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதனால் கடந்த 2021-ம் ஆண்டு முதல் அலெக்சி நவால்னி சிறை தண்டனை அனுபவித்து வந்தார்.

இந்த நிலையில் அலெக்சி நவால்னி திடீரென சிறையிலேயே உயிரிழந்ததாக கடந்த வாரம் ரஷிய ஊடகங்களில் செய்தி வெளியானது. அவரது உயிரிழப்புக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. முன்னதாக அலெக்சி நவால்னி கடந்த 2021-ல் டாம்ஸ்க் நகரில் இருந்து மாஸ்கோவுக்கு சென்றபோது விமானத்தில் அவர் குடித்த தேநீரில் விஷம் கலக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தசம்பவத்தில்ரஷிய அரசாங்கத்துக்கு தொடர்பு இருப்பதாக ஜெர்மனி குற்றம்சாட்டியது. ஆனால் இந்த குற்றச்சாட்டை முற்றிலும் மறுப்பதாகரஷிய அரசாங்கம் தெரிவித்தது. இந்த நிலையில் அலெக்சி நவால்னி மர்மமான முறையில் சிறையில் உயிரிழந்த சம்பவம் உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே உக்ரைனுடனான போர் உள்ளிட்ட பிரச்சினைகளால் நாட்டு மக்களிடம் அதிருப்தியை சம்பாதித்து உள்ள அதிபர் புதினுக்கு, எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னியின் மரணம் கூடுதல் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் அலெக்சி நவால்னியின் உயிரிழப்பு குறித்து அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் பேசுகையில், "அலெக்சி நவால்னி மிகவும் துணிச்சல் மிக்கவர். அவர் மீண்டும் ரஷியாவுக்கு சென்றிருக்கக் கூடாது. ரஷிய மக்கள் எது நடக்கக் கூடாது என்று நினைத்தார்களோ அது நடந்துவிட்டது. ரஷியாவில் நடப்பது தற்போது அமெரிக்காவிலும் நடக்கத் தொடங்கியுள்ளது. அலெக்சி நவால்னியைப் போல இங்கு என்னைத்தான் இவர்கள் குறிவைக்கிறார்கள். என் மீது பழி சுமத்துகிறார்கள்" என்று தெரிவித்தார்.

# கேன்சர் நோய் சிகிச்சையினால் ஏற்படும் வலியை நீக்க புது வழிமுறை



**பிரிட்டன் : பிப். 23, உலகெங்கும் உள்ள மக்களை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்று, கேன்சர் எனப்படும் புற்றுநோய்.**

உடலின் பல்வேறு பகுதிகளில் ஏற்படக்கூடிய கேன்சர் நோய்க்கு, நவீன மருத்துவத்தில் பல சிகிச்சை முறைகளும், மாத்திரைகளும், மருந்துகளும் உள்ளதால் நோயை கட்டுக்குள் வைக்க முடிகிறது. ஆனால், இத்தகைய சிகிச்சை முறைகளில் நோயாளிகளுக்கு வலி அதிகம் இருப்பது தவிர்க்க முடியாததாக இருந்து வருகிறது.

கேன்சர் நோய் தீர்க்கும் வழிமுறைகள் மற்றும் வலியற்ற சிகிச்சை முறைகள் குறித்து உலகம் முழுவதும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், இங்கிலாந்தின் "கிழக்கு ஃபோல்க் மற்றும் வடக்கு எஸ்செக்ஸ்" பகுதியில் தேசிய சுகாதார சேவையின் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் எனும் லாப நோக்கமற்ற அமைப்பு கேன்சர் நோயாளிகளுக்கு பல்வேறு மருத்துவமனைகளில் கேன்சர் நோய்க்கான சிகிச்சை அளித்து வருகிறது.

இந்த அமைப்பை சார்ந்த மருத்துவர்கள் தங்கள் ஆய்வில் "லைட் தெரபி" எனப்படும் "ஒளி சிகிச்சை" மூலம் கழுத்து மற்றும் தலை கேன்சர் நோயாளிகளுக்கு கீமோதெரபி (மருந்து சிகிச்சை) மற்றும் ரேடியோதெரபி (கதிரியக்க சிகிச்சை) ஆகியவற்றின் பக்கவிளைவாக ஏற்படும் வலி, பெருமளவு குறைவதை கண்டுபிடித்துள்ளனர்.

பிற தெரபிகளின் பக்க விளைவாக வாய் பகுதியில் ஏற்படும் வலியை "லைட் தெரபி" குறைக்கிறது. "ஃபோட்டோ பயோ மாடுலேஷன்" சிகிச்சை எனப்படும் பிபிஎம் பெற்று கொண்ட நோயாளிகளுக்கு வலி நிவாரண மருந்துகள் தேவைப்படுவதில்லை என தெரிய வந்துள்ளது. சீராக அகச்சிவப்பு ஒளியை வாய் பகுதியில் பாய்ச்சுவதன் மூலம் வாய் புண் மற்றும் வலி குறைந்துள்ளது.

"பிற சிகிச்சைகளினால் ஏற்பட்ட வாய் புண் குறையாமல் இருந்தது. அதன் காரணமாக திரவ உணவு மட்டுமே உட்கொள்ளும் நிலை இருந்து வந்தது. மேலும், நாவினால் எந்த சுவையையும் அறிய முடியவில்லை. ஆனால், பிபிஎம் சிகிச்சை நிம்மதியான அனுபவத்தை கொடுத்தது" என ஒரு நோயாளி தெரிவித்தார். வரும் மாதங்களில், பிபிஎம் சிகிச்சையின் பரவலான பயன்பாடு குறித்து மேலும் தகவல்கள் வெளிவரலாம்.

# இங்கிலாந்து மன்னர் சார்லஸ் – பிரதமர் ரிஷி சுனக் சந்திப்பு



**இங்கிலாந்து : பிப். 23, இங்கிலாந்து மன்னர் சார்லஸ் மற்றும் அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக் நேரில் சந்தித்து பேசினர்.**

மன்னர் சார்லஸ்-க்கு புற்றுநோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, முதல்முறையாக மன்னர் சார்லஸ் மற்றும் ரிஷி சுனக் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

பக்கிங்காம் அரண்மனையில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, மன்னர் சார்லஸ், "பல்வேறு அற்புதமான தகவல்கள் மற்றும் வாழ்த்து அட்டைகள் எனக்கு வந்துள்ளன. இவை என் துயரத்தை பெரும்பாலான சமயங்களில் குறைத்துள்ளன," என்று தெரிவித்தார்.

"நாங்கள் அனைவரும் உங்களுக்கு பின்புலமாக இருக்கிறோம். இந்த தேசம் உங்களுக்கு ஆதரவாக நிற்கிறது," என்று மன்னர் சார்லஸ்-இடம் ரிஷி சுனக் தெரிவித்தார்.

# குஜராத்தில் அன்று மோடி கேட்டதை இன்று நாங்கள் கேட்கிறோம் ; தங்கம் தென்னரசு ஆவேசம்





# வங்கிக் கணக்கில் இருந்து பாஜக பணம் திருடுவதாக காங்கிரஸ் குற்றச்சாட்டு

# திமுக தூங்கிக் கொண்டிருக்கிறது மேகேதாட்டு விவகாரத்தில் இபிஎஸ் காட்டம்




சென்னை / புதுக்கோட்டை | 23.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

23.02.2024 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

டபிள்யூ. இ. பி. டுபோய்ஸ் , அமெரிக்க வரலாற்றாளர் (பி.1868) (இ.1963)



ராஜினி திராணகம , இலங்கை மருத்துவர், மனிதவுரிமைச் செயற்பாட்டாளர், கல்வியாளர் (பி.1954) (இ.1989)



மைக்கேல் டெல் , அமெரிக்கத் தொழிலதிபர் (பி.1965)



சக்தி வாசு , தமிழக நடிகர் (பி.1983)



## இன்றைய நினைவு நாள்

ஜான் குவின்சி ஆடம்ஸ் , அமெரிக்காவின் 6வது அரசுத்தலைவர் (பி.1767) (இ.1848)



மதுபாலா , இந்திய நடிகை (பி.1933) (இ.1969)



ஈ. வெ. கி. சம்பத் , தமிழக அரசியல்வாதி (பி.1926) (இ.1977)

